இலவச வெளியீடு யாழ்ப்பாணம்: Free Circulation

2011

வைகாசி, ஆனி, ஆடி

# Vettimaniy
# வெற்றிமணி

மணி - 51

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A.
இணை ஆசிரியர் திருமதி வலன்ரீனா இளங்கோவன் B.A.(Hons)

ஓசை 14

Orient Textiles & Jewellery



மாணவர் கல்வி சிறக்க எமது வாழ்த்துக்கள்

Konigswall16(AmHBF)
44137 Dormund
Germany
Tel: 0231-162377

## தண்ணீருக்கே தண்ணி காட்டிய ஜேர்மனி






யாழ் இந்து மகளிர் கல்லூரி......



நட்டத்தையும் இலாபமாக்கத் தெரிந்தவர்கள் யப்பானியர்!

விளையாட்டு அரங்கில்...



கலை அரங்கில்.....



சாதனையாளர் அரங்கில்.................



U.K.- Canada-France-Singapore-India-Sri-lanka

Ayngaran International

AYNGARAN




மாணவர்களின் கல்வி சிறக்க என்றும் எங்கள் வாழ்த்துக்கள்

30, High Street, Collierswood,London SW19 2AB,UNITED KINGDOM

மாணவர் மனங்களில் ஒலிக்கட்டும் வெற்றிமணி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெற்றிமணி



ஸ்தாபகர்
**அமரர் மு. க. சுப்பிரமணியம்**
(முன்னாள் அதிபர் :
குரும்பசிட்டி பொன். பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
"ஓவியக்கலைவேள்"
**கலாநிதி**
**மு. க. சு. சிவகுமாரன்** B.F.A.

*Chief Editor:*
*Dr.M.K.S.Sivakumaran B.F.A.*
Germany

இணையாசிரியர்
**திருமதி**
**வலன்ரீனா இளங்கோவன்**
(B.A.Hons), Dip.in.Edu.

Associate Editor
**Mrs. Valanteena Elangkovan,**
(B.A.Hons), Dip.in.Edu,
Jaffna.

கௌரவ ஆலோசகர்
**கலாநிதி மனோன்மணி**
**சண்முகதாஸ்**

தொடர்புகளுக்கு :
**வெற்றிமணி**
தபால்பெட்டி ஒழுங்கை,
பலாலி வீதி, உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்,
யாழ்ப்பாணம்.

T.P. : 0776686462
E-mail : vettimaniy@gmail.com

**மக்கள் தொடர்பு**
**திரு. சு. இளங்கோவன்** B.A.,
Dpi.in.S.Sc, Dip.in.F.Sc, Dip.in.S.B.M., Spl Trd.
**(யாழ்ப்பாணம்)**

Dr. **கதிர்துரைசிங்கம்** (R.M.O)
**(கனடா)**

**திரு. சஞ்சீவன் சிவகுமாரன்**
(B.Sc.Eng.)
**(இங்கிலாந்து)**


**"வெற்றிமணிமொழி"**
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச் செல்கிறது.

அரவிந்தர்



# சகல பாடசாலைகளுக்கும் வெற்றிமணி வருகின்றது!



இலவச வெளியீடாக வெளி வந்து கொண்டிருக்கும் இவ் வெற்றிமணி, இந்த இதழ் முதல் வடமாகாணத்திலுள்ள சகல பாடசாலை களையும் சென்றடைய வழி திறந்துள்ளது.




இதற்குக் காரணம் எமது மாகாணக் கல்விச் செயலர் திரு.இ.இளங்கோவன் அவர்களும் மாகாணக் கல்விப் பணிப்பாளர் திரு.பா.விக்னேஸ்வரன் அவர்களும் ஆவர்.

சகல பாடசாலைகளுக்கும் இதனை அனுப்பி வைக்கும் பொறுப்பை இவர்கள் மகிழ்வோடு ஏற்றுக்கொண்டனர். இத னால் இதுவரை இருந்து வந்த தபாற்செலவுத் தடை நீங்குகின்றது. இவர்களது இச்சேவையை பாடசாலை கள் சமூகம் நன்றியுடன் நோக்கவேண்டும்.

வெற்றிமணியின் வெற்றி சகல பாடசாலை களினதும் ஆசிரியர்கள், மாணவர்களது கை களிலேயே தங்கியுள்ளது. கல்வி, கலை, விளையாட்டு, அறிவியல், தொழில்நுட்பம், ஆன்மீகம் சார்ந்த சகலதுறை நல்லாக்கங்கள் மற்றும் மாணவர்களது சாதனைகள் முதலான வற்றைத் தந்துதவவேண்டும். இவற்றை நாம் பெற்றுக்கொள்வதற்கு அதிபர்களது ஒத் துழைப்பு மிக அவசியம்.

மேலும் வெற்றிமணியின் தரத்தை உயர்த்திக் கொள்வதற்கு மாகாணக் கல்விச் செயலரதும் மாகாண கல்வி பணிப்பாளரதும் வழிகாட்டலில் ஓர் ஆலோசனைக் குழுவை அமைக்கவேண்டும் என்பது எமது அபிலாசையாகும்.



மாகாணக்கல்வி அமைச்சி னதும் திணைக்களத்தின தும் விசேட தகவல்கள் பாடசாலைகளைச் சென்றடையவும் வெற்றிமணி ஓர் ஊடகமாக அமையட்டும். பெரும் பணச்செலவில் இலவச மாக வெளிவரும் இவ்வேடு எமது மண்ணின் கல்வி அபிவிருத்திக்கு உச்சப்பயனை வழங்க வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

மாகாணக் கல்விச் செயலரும் மாகாணக் கல்விப்பணிப்பாளரும் வழங்கும் ஒத்து ழைப்புக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"

மு.க.சு. சிவகுமாரன்
பிரதம ஆசிரியர்

திருமதி வலன்ரீனா இளங்கோவன்
இணை ஆசிரியர்

# 18இல் பார்வை இழந்தேன்; படிக்கும் வாய்ப்பினைப் பெற்றேன்!



இராஜ்குமார் ஓர் ஏழை விவசாயியின் மகன். விசுவமடுவில் வாழ்ந்தபோது தனது 10ஆவது வயதில் தந்தையை இழந்தார். தாயின் கடின உழைப்பைக் கண்டு பொறுக்காது இவர் தனது படிப்பைத் துறந்து வேலைதேடி அலைந்தார். 13ஆவது வயதில் மாடு மேய்க்கும் தொழிலில் சக பாடி ஒருவருடன் ஐந்து வருடங்களாக ஈடு பட்டார். சுமார் 600 மாடுகளை மேய்த்த தால் கணிசமான வருமானம் பெற்றார்.

ஒருநாள் குளக்கரையில் காணப்பட்ட ஒரு பொருளை மாடு மேய்க்கும் பொழுது சகபாடி எடுத்துவந்து கல்லால் குத்தி உடைத்தபோது அப்பொருள் வெடித்தது. சகபாடி இறக்க ராஜ்குமார் இரண்டு கண் களையும் இழந்தார். வவுனியாவிலும் கொழும்பிலும் சென்று சிகிச்சை பெற்று அது பயனளிக்காது எதிர்காலமே இல்லை என்று எண்ணினார். இவ்வேளையில் தாயின் மரணமும் பேரிடியாக அமைந்தது. ஊருக்குச் சென்று தற்கொலை செய்யும் முடிவோடு திரும்பினார்.

ஆனால் முல்லைத்தீவிலிருந்த "இனிய வாழ்வு" இல்லத்தில் மற்றவர்களின் வற்புறுத்தலினால் சென்று சேர்ந்தார். அதன் பேறாகக் கல்வி கற்கும் வாய்ப்புக் கிடைத்தது. 5ம் வகுப்புடன் கல்வியைத் துறந்திருந்த அவர் தனது 22ஆவது வயதில் க.பொ.த (சா/த) பரீட்சையில் தோற்றி வெற்றி காணாது அடுத்த வருடம் சித்தியடைந்தார். 2006ம் ஆண்டில் தனது 26ஆவது வயதில் யாழ் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகித் தற்போது அரசியல் விஞ்ஞான சிறப்புக் கற்கைநெறியின் இறுதியாண்டில் கல்வி கற்றுக்கொண்டிருக்கிறார்.

தனது பேராசிரியர் கணேசலிங்கத்தின் வழிகாட்டலில் தான் கற்ற இனிய வாழ்வில்லத்தை புனரமைப்புச் செய்யும் பணியை மேற்கொண்டு யுத்தத்தினால் சிதறியோடிய மாணவர்களை வரவழைத்து ஆத்திசூடி வீதி கந்தர்மடத்தில் இனிய வாழ்வில்லத்தை இயக்க முற்பட்டார்.

யுத்தம் முடிவிற்கு வந்த நிலையில் விசுவமடுவிற்கு இந்த இல்லத்தைக் கொண்டு சென்று பெருஞ்சுமையுடன் தற்போது நடத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.




## திருமுருகன் திருமண மண்டபம்

**திருமண மற்றும் மங்கல வைபவங்கள் அனைத்தையும்**
**சிறப்பாக நடத்துவதற்கு ஓர் சிறந்த மண்டபம்**
**திருமுருகன் கல்யாண மண்டபம்**

திரு.சிவசுப்பிரமணியம்
(செட்டியார்)
தொலைபேசி : 0776660211


கந்தசாமி கோவில் வடக்கு வீதி,
கரந்தன் வீதி, நீர்வேலி, யாழ்ப்பாணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# தண்ணீருக்கே தண்ணிகாட்டிய யேர்மனி

-மாதங்கி





ஆதி மனிதனுக்கும் இன்று புது யுகத்தில் வாழும் மனிதனுக்கும் சிந்தனைகள் அறிவுகள் என்பன அடிப்படையில் ஒன்றாகவே இருந்துள்ளன. தந்தை செய்து முடிக்காததை தனயன் செய்து முடிக்கின்றான் என்று இளையவர்களை உற்சாகப்படுத்தக் கூறினாலும், தந்தை செய்ய நினைத்த அல்லது நினைக்கத் தூண்டிய அந்த அறிவு தந்தைக்கும் மகனுக்கும் ஒன்றாகவே உள்ளது.

இருப்பினும் செயற்படுத்தலில் காலம் கைகொடுக்க வேண்டும். அதற்கு மேலாக தந்தை அன்று நினைத்ததை செய்ய அதற்குரிய உபகரணங்கள் இலகுவாகக் கிடைத்திருக்கமாட்டாது. அறிவியல் என்பது ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் முளைவிடும் ஒன்றாக இருந்தாலும் அதன் நிறைவு கூட்டு முயற்சியில் பலரது கண்டுபிடிப்புக்களுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

தந்தை சிறு பள்ளத்தைக் கடக்க பள்ளத்தை நிரப்ப வேண்டும் என்று எண்ணினால், மகன் அப்பள்ளத்தைக் கடக்க பாலம்போடவேண்டும் என்று எண்ணுவான். காரணம் தந்தையின் காலத்தில் பாலம்போட எண்ணினாலும் அதனை நிறைவு செய்ய பக்கபலம் குறைவாகவே இருந்திருக்கும். எனவே இருப்பதைக் கொண்டு சிறப்பாக வாழும் தற்காலிக முயற்சியில் முதல் இறங்கினர். இரண்டு துருவங்களை இணைக்க மரத்தையும் கல்லையும் பாவித்தனர். இன்றும் மலைநாடுகளில் பார்த்தால் (இலங்கையில்) ஒரு சிறு நீரோடையைக் கடக்க குறுக்கே ஒரு மரம் போட்டு இருப்பார்கள். அல்லது தென்னை மரத்தை வெட்டிப் போட்டு மேலே நடப்பார்கள். இல்லை ஒரு பெரிய பாறாங்கல்லை உருட்டிவந்து ஓடைக்கு மேல் நிற்கும் வண்ணம் செய்து அதனைப் பாலமாக்கி நடப்பார்கள்.

அன்று அந்தப் பாலம் கட்டுவதற்கான சிந்தனை பொறிதட்டியிருந்தாலும் பொறிமுறை வளர்ச்சி கண்டிருக்கவில்லை. இந்தப் பொறிமுறை வளர்ச்சி நாளுக்கு நாள் அனுபவ அறிவுடன் கலந்து வியக்கத் தக்க முன்னேற்றம் கண்டது. இதனால் இன்று தந்தையின் கனவை மகன் இலகுவாக நனவாக்குகின்றான். நாளை இவன் கனவை அவன் மகன் சட்டென்று முடித்துக் காட்டுவான். இது ஒரு அறிவியல் மரதனோட்டம்.

இங்கு பாருங்கள். ஜேர்மனியில் 1917ம் ஆண்டு ஒரு ஆற்றைக் கடக்க ஒரு ஆறு வேண்டும் என்று சிந்தித்த மனிதனின் அறிவு முதிர்ந்து ஆற்றல் பெற எண்பது வருடங்கள் எடுத்துள்ளது. தரையில் ஓடும் வாகனம் ஒரு பள்ளத்தைக் கடக்க ஒரு தரை மேலே வேண்டு மல்லவா? அதேபோல் நீரில் ஓடும் கப்பலை இன்னுமொரு கப்பல் கடக்க மேலே நீர்வேண்டு மல்லவா?

ஜேர்மனியில் ஒரு ஆற்றைக்கடக்க ஒரு ஆற்றுப் பாலம் போட 1917இல் சிந்தித்தனர். நேர போக வேண்டிய ஆறு பள்ளத்தில் விழுந்து சுற்றிப் போகின்றது. நேராகவே ஆற்றைச் செல்லவிட ஒரு பாலம் தேவை. அது நீரினாலான பாலமாக இருக்கவேண்டும். ஏனென்றால் அந்தப் பாலத்தில் பயணிக்க இருப்பது பெரும் பாரங்களைச் சுமந்து செல்லும் கப்பல்களே.

பாலத்தினை 1930ம் ஆண்டு ஜேர்மனியில் பேர்ளின் நகருக்கு அருகாமையில் உள்ள (Elbe river near Magdeburg) நகரத்தில் ஆரம்பிக்க திட்டங்கள் நிறைவு செய்திருந்தனர். அதேநேரத்தில் இரண்டாவது உலக மகா யுத்தம் (1942) பேர்ளின் கூறு போடப்பட்டு விட்டது. இதனால் முடங்கிப்போன திட்டம் 1990ஆம் ஆண்டு மீண்டும் கூறுபோட்ட ஜேர்மனி ஒருங்கிணைந் தமையால் முடங்கிய திட்டமும் முத்துயிர் பெற்றது. 1997ம் ஆண்டு இப்பாலத்திற்கான வேலை தொடங்கப்பட்டு 2003ம் ஆண்டு நிறைவு செய்யப்பட்டது.

ஆறு வருடங்களில் ஆற்றைக் கடக்க ஆற்றுப் பாலம் போட்டு முடிக்கப்பட்டது. இப்பாலத்தின் நீளம் 918 மீற்றராகும். அதன் அகலம் 34 மீற்றராகும். அதன் ஆழம் 4.25 மீற்றராகும். இந்த (Teh water Bridge) நீர்ப்பாலத்தில் ஒரு கப்பல் (1350 metric tons) 1.350 மெற்றிக் தொன் நிறையை ஏற்றிச்செல்ல முடியும். உதாரணமாக 50 லொறிகளை ஏற்றிச்செல்ல முடியும். தண்ணீரைக் கடக்க தண்ணீருக்கே தண்ணிகாட்டிய ஜேர்மனியை மெச்சாமல் இருக்கமுடியாது. ஐரோப்பா விலேயே முதலாவது நீளமான நீர்ப்பாலம் இது. இதனால் சுற்றி வளைந்து வந்து சென்ற கப்பல்கள் எல்லாம் நேராகப் பயணிக்கின்றன. நேரம் மிச்சம். எலாம் அடித்த பின்னும் திரும்பி அரைமணித்தியாலம் திரும்பிப் படுத்து எழும் எண்ணம் இருப்பவர்களுக்கு இந்த நேர மிச்சத்தில் இஷ்டம் இருக்காது.


## வெற்றிமணி வாழ்த்துகிறது

**02.06.2011இல் மணிவிழாக் காணும் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர்**

**உயர்திருவாட்டி. அ. வேதநாயகம் அவர்கள்**




பள்ளிப் பருவத்திலே வெற்றிமணிக்கு
மணிமணியாய் ஆக்கங்கள் பல தந்து
வெற்றிமணி வாசகியாய் வலம் வந்து – கல்விப்
பணிப்பாளராய் வெற்றிநடை போட்டு
வெற்றிமணி விழாக்களைச் சிறப்பித்து
மாண்புறு சேவைதனை இம்மண்ணிலே ஆற்றி
மணிவிழாக் காணும் மாணிக்கமாம் நாயகியை
வெற்றிமணி மணிமணியாய் வாழ்த்தி மகிழ்கின்றது.



**28-05-2011 இல் பொன்விழாக் காணும்**

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரியின்
அதிபரும், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான
தலைவருமான

**உயர்திரு. ஆறு. திருமுருகன்**

**அவர்களை**

**சீரும் சிறப்பும் பெற்று சேவைகள் பல ஆற்றி
பல்லாண்டு காலம் சிறப்புற வாழ "வெற்றிமணி"
வாழ்த்தி மகிழ்கின்றது.**

## யாழ் இந்து மகளிரின் வாழ்த்து



**02.06.2011இல் மணிவிழாக் காணும்
புகழ்பூத்த யாழ். வலயக்
கல்விப் பணிப்பாளர்**

**உயர்திருவாட்டி
அ. வேதநாயகம்** அவர்களை

**சீரும் சிறப்பும் பெற்று பல்லாண்டு காலம்
வாழ வாழ்த்துகிறோம்.**

**- கல்லூரிச் சமூகத்தினர்**

**ஆயிரம் தடவை அளவெடு, ஒரு தடவை வெட்டு.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுந்தர்சன் ஆதரவில் மாணவர் அரங்கம்

## கல்வி



சுற்றாடலை பாதுகாப்போம் – நாமும்
சுகமுடன் வாழ்ந்திடுவோம்
நல்ல கல்வி நாமும் கற்போம்
நாட்டுக்கு புகழ் தேடுவோம்

தந்தானே தந்தானனே தன
தந்தானே தந்தானனே

பாடசாலை ஒழுங்கில் நாமும்
கல்வியை வளர்த்திடுவோம்
ஆசிரியர் சொற்படி
கேட்டுமெல்லோ கற்றிடுவோம்

தந்தானே தந்தானனே தன
தந்தானே தந்தானனே

பெற்றோரை தினமும் அல்லோ
சுகமுடனே பேணிடுவோம்
பெரியோரின் வார்த்தைகளை – நாமும்
தட்டாமல் கேட்டிடுவோம்.

தன்னானே தன்னானனே தன
தன்னான்னே தன்னானன்னே.

**செ. டிலைக்சனா**
வ/தவசிக்குளம் அ.த.க பாடசாலை.
சாஸ்திரி கூமாங்குளம், வவுனியா.

## மரத்தில் பூக்காத பூக்கள்



1. மனிதனைப் புகழும் பூ – சிறப்பு
2. மலர்ச்சியில் வரும் பூ – சிரிப்பு
3. காலையில் வரும் பூ – விழிப்பு
4. சமையலறையில் உள்ள பூ – அடுப்பு
5. ஒளி தரும் பூ – லாம்பு
6. சுவை தரும் பூ – உப்பு
7. ஆசையில் வரும் பூ – அங்கலாய்ப்பு
8. கோபத்தில் வரும் பூ – வெறுப்பு
9. பாதங்களைக் காக்கும் பூ – செருப்பு
10. காயங்களினால் வரும் பூ – வலிப்பு
11. காரமான பூ – உறைப்பு
12. எல்லோருக்கும் தேவையான பூ – அன்பு
13. மனிதருக்கு இருக்கவேண்டிய பூ – பண்பு
14. இதயத்தில் உள்ள பூ – துடிப்பு
15. இருட்டான பூ – கறுப்பு
16. பதவியில் உள்ள பூ – பொறுப்பு
17. அடிக்க உதவும் பூ – கம்பு
18. குளிரினால் வரும் பூ – விறைப்பு
19. கையில் அணியும் பூ – காப்பு
20. இலங்கையின் பூ – கொழும்பு

**சி. கிருசாந்தினி**
தரம் – 10,
யா / யாழ் இந்து மகளிர் கல்லூரி.

# Why I choosed English medium for my Studies



I am Princeshica Premkumar. I am Studying at J/ Hindu Ladies College. I Selected English Medium as English is an International Language.

My mother lost her father at the age of 15. Her father was rich at one time, then all the relation got help from him. After his death nobody helped my mother. she was the only child in family and she had to earn for her living. She Clever in Studies but she couldn't continue her studies due to poverty as times passed her friend wanted to help my mother and she proposed her brother to my mother and got married at the age of 21.


My father lost his father and his mother got married again and he was ill treated by his step father there for couldn't study higher as their weren't any one to guide him. He was working in a shop and on his own attempts he become Business man. Today by the grace of god is a leading business man.

I had 2 younger brothers who are 8 and 5 years old. My parent don't want to mistake what my grand parents did. My ambition is to become bank manger one day and full fill my parent wishes.

**Miss P. Princeshica**
Year 9
J/ Jaffna Hindu Ladies College.



**ஜெ. ஜெயடக்ஷனா**
தரம் – 6,
எடிசன் கல்வி நிலையம், யாழ்ப்பாணம்.



**க. லிந்துஜா**
தரம் – 6
யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை




**உ. கார்த்திகன்**
தரம் – 6,
யா / யாழ் இந்துக் கல்லூரி

## சைக்கிள்



தங்கையே பார்! தங்கையே பார்!
சைக்கிள் வண்டி இதுவே பார்!

சிங்காரமான வண்டி,
சீமையிலே செய்த வண்டி

இரும்பாலே செய்த வண்டி,
எங்கெங்கும் ஓடும் வண்டி,

தீயில்லை புகையும் இல்லை
தீவிரமாய் சென்றிடும் பார்

அக்காளும் தங்கையும் போல்
அவை போகும் அழகைப்பார்!

**சி. அனுசிகா**
தரம் – 7,
யா / வைத்தீஸ்வராக் கல்லூரி.

*visit our new show room...*



# சுந்தர்சன் Suntharsan

**DISTRIBUTORS OF ELECTRIACL ITEMS AND ELECTRICAL APPLIANCES, WATER PUMPS.**



சுந்தர்சன்
மத்திய சந்தை முன்பாக,
பிரதான வீதி,
மானிப்பாய்

**மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகிறோம்.**

தொலைபேசி இல. : 021 222 2751
021 4591569
தொலைநகல் : 021 222 2751

எதனையும் செய்யாமல் முடியாது என்று எண்ணாதே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கஜமுகன் ஹாட்வெயர் ஆதரவில் சாதனையாளர் அரங்கு

### யாழ் இந்துக் கல்லூரி மாணவனின் சாதனை



யாழ் இந்துக் கல்லூரி மாணவன் செல்வன் விஜயகுமார் வத்சாங்கிதசர்மா 2010ம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டியில் தனியிசை பிரிவு 1இல் முதலாமிடத்தைப் பெற்று பாடசாலைக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரை வெற்றி மணி சாதனையார் அரங்கு வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகின்றது.

### யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவியின் சாதனை!



யாழ் இந்து மகளிர் கல்லூரி மாணவயான செல்வி சி. அபித்ரா 2009ம் ஆண்டு நடைபெற்ற தேசியமட்ட தமிழ்த்தினப் போட்டி யில் தனிநடனம் பிரிவு -1இல் முதலாமிடத்தைப் பெற்று கல் லூரிக்குப் பெருமை சேர்த்துள்ளார். இவரை வெற்றிமணி சாதனை யாளர் அரங்கு வாழ்த்துகின்றது.

### யா/ கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களின் சாதனை



யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவர்கள் 2010ம் ஆண்டு நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் மாகாண மட்டத்தில் தென்மோடி நாட்டுக்கூத்துப் போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்கள். இவர்களை வெற்றிமணி சாதனையார் அரங்கு மேலும் பல சாதனைகள் படைக்கவேண்டி வாழ்த்துகின்றது.

## சர்வதேச சதுரங்கப் போட்டியில் யாழ் பல்கலை மாணவி சாதனை!



யாழ் பல்கலைக்கழக மாணவி சர்வதேவ சதுரங்கப் போட்டியில் 3ம் இடத்தைப் பெற்று சாதனை புரிந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தின் 3ம் வருட மாணவியுமான செல்வி. வித்தியாரணி சிவகுருநாதன் இலங்கையில் நடந்த "தம்ஸோ" சர்வதேச சதுரங்க விழாவில் மிகத் திறமை வாய்ந்த பெண்களுக்கிடையே யான போட்டியில் கலந்து 3ம் இடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

அத்துடன் தரவரிசையில் கூடுதல் புள்ளிகளைப் பெற்று இலங்கையின் சதுரங்க வீராங்கனைகளின் மத்தியில் முதலாமிடத்தையும் இந்தப் போட்டியின் முடிவில் பெற்றுக்கொண்டார். அம்பலாங்கொடையில் ஆரம்பித்த இப்போட்டி கடந்த மாதம் 20ம் திகதி வரை 5 நாட்கள் நடைபெற்றது.

அம்பலாங்கொடையிலுள்ள தர்மாசோகா கல்லூரியின் கேட்போர் கூடத்தில் நடந்த இந்த நிகழ்வின் பின்னரான தரவரிசையில் 1933 புள்ளிகளைப் பெற்று இலங்கைப் பெண்கள் வரிசையில் முதலாமிடத்தையும் இவர் சுவீகரித்துக் கொண்டார்.

இவர் கடந்த காலத்திலும் பல சாதனைகள் புரிந்துள்ளார்.

கடந்த வருடம் கண்டியில் நடந்த சர்வதேச திறந்த போட்டியில் முதலாமிடத்தைப் பெற்று சாதனை புரிந்தார். இந்த வருடம் மலேசிய நாட்டின் கோலாலம் பூரில் நடந்த சர்வதேச போட்டியில் கலந்து கொண்டு 12ம் இடத்தைப் பெற்றுக்கொண்டார்.

யாழ் வேம்படி உயர்தர பாடசாலை மாணவியாக இருந்த போது கிரேக்க தேசத்தின் தலைநகரான ஏதென்ஸ் நடந்த சர்வதேச இளையோருக்கான சம்பியன் போட்டியிலும் 2004ம் ஆண்டு கலந்து கொண்டிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

வித்தியாரணி மேலும் பல சாதனைகளை நிலை நாட்ட வேண்டுமென்று வெற்றிமணி சாதனையாளர் அரங்கு வாழ்த்துகின்றது.

### யா/விக்டோரியாக் கல்லூரி மாணவியின் சாதனை!



யா/விக்ரோறியாக் கல்லூரி மாணவி செல்வி. லாவண்யா சயந்தன் அகில இலங்கை ரீதியில் 2010ம் ஆண்டில் நடைபெற்ற தமிழ்த்தினப் போட்டியில் தனிநடன நிகழ்வில் முதலிடம் பெற்றுள்ளார். இவருக்கு நடைபெற்ற பாராட்டுவிழாவின்போது கல்லூரி அதிபர் திரு.வ. ஸ்ரீகாந்தன் மாணவியை வாழ்த்துவதை படத்தில் காணலாம். இம் மாணவி மேலும் பல சாதனைகள் படைக்க வெற்றிமணி சாதனையாளர் அரங்கு வாழ்த்தி மகிழ்கின்றது.

### யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் சாதனை!



யா/வேம்படி மகளிர் கல்லூரி மாணவியான செல்வி பாவனா சிவயோகன் 2010 தேசியமட்ட தமிழ்த் தினப் போட்டியில் தனி நடனம் பிரிவு-3இல் முதலா மிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.



மேலும் இக் கல்லூரியைச் சேர்ந்த செல்வி அபிநயா கண்ண தாஸ் அவர்களும் 2010ம் ஆண்டு நடை பெற்ற தேசியமட்ட தமிழத்தினப் போட் டியில் தனிநடனம் பிரிவு-4இல் இரண்டாமிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

செல்விகள் பாவனா சிவயோகன், அபிநயா கண்ணதாஸ் ஆகியோர் மேலும் பல சாதனைகள் புரிய வெற்றிமணி வாழ்த்துகின்றது.

T.P. 2833

உ
கற்பக விநாயகர் துணை

KMH

KAJAMUGAN HARDWARE
கஜமுகன் ஹாட்வெயர்

சாதனை படைத்த மாணவர்களை வாழ்த்துகின்றோம்.

*Hardware Merchants, Importers of Building Materials, Cement, Paints, Electrical Goods, Cycles, Cycle Parts & Accessories.*

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

147, 149, Stanley Road,
Jaffna.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EUT ஆதரவில்

# சிறுவர் அரங்கம்

## எனது பாடசாலை



எனது பாடசாலையின் பெயர் யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம். எனது பாடசாலையின் அருமை மிக்க அதிபர் மரியா ஜீவந்தி அவர்கள். எனது பாடசாலை யாழ்ப்பாணத்தி லுள்ள றக்கா வீதியில் அமைந்துள்ளது. இங்கு பச்சை, மஞ்சள், சிவப்பு, றோஸ் என்ற நிறங்களில் நான்கு இல்லங்கள் உண்டு.

எனது பாடசாலையில் 25 ஆசிரியர்கள் கற்பிக்கின்றார்கள். இங்கு ஆயிரத்திற்கு மேற்பட்ட மாண வர்கள் கல்வி கற்கிறார்கள். எனது பாடசாலை யாழ்ப்பாணத்தில் முதல்நிலையில் உள்ளது. இப்பாட சாலையில் எனது கல்வியைத் தொடர்ந்து பயில வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

*ரா. பவித்திரா*
தரம் 3,
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

## ஜேர்மனி மத்திய மாநிலத்தில் ஆத்திசூடியில் முதலிடம்

*சிறுமி கஜனிகா உத்தமன்*



யேர்மனி லூடின்சைட் தமிழாலய மாணவி கஜனிகா உத்தமன் யேர்மனி தமிழ்க் கல்விக்கழகம் நடாத்திய மத்திய மாநில அளவில் ஆத்திசூடி மனனப் போட்டியிலும் சொல்வதெழுதல் போட்டியிலும் பெற்றமைக்கான சான்றிதழ் (தமிழ்த்திறன் இறுதிப்போட்டி – 2010) 19.2.2011 வியசென் நகரில் வழங்கப்பட்டது. தமிழ் கற்ற உட்புகும் சிறார்களை சிறுவர் அரங்கு வாழ்த்துகின்றது.

## நேர்மை



குமரன் என்றொரு செல்வந்தன் கடலூர் என்னும் கிராமத்தில் வசித்து வந்தான். அவனிடம் பல செல்வங்கள் இருந்தன. ஆனால் நேர்மை இல்லை. பிறர் மீது அன்பு இல்லை. தானே பெரியவன் என்ற அகந்தை உண்டு. அதனால் மக்களுக்கு அவனைப் பிடிப்பதில்லை. அவ்வூரிலே மாறன் என்றொரு ஏழை இருந்தான். அவன் நேர்மை உள்ளவன். பிறருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வான். மக்கள் மாறன் மீது அன்பும் இரக்கமும் வைத்திருந்தனர். ஆனால் இது குமரனுக்குப் பிடிக்கவில்லை. மக்கள் தன் மீதே அன்பு காட்டவேண்டு மென எண்ணினான். அதற்காக ஒரு சூழ்ச்சி செய்தான். தனது அடிமை ஒருவனை அழைத்து அவனிடம் இரசியமாக ஏதோ கூறினான். அவனும் அதற்கு சம்மதித்தான். அன்று இரவு அனைவரும் உறங்கியபின் அந்த அடிமை அரசாங்கம் தெருவில் வைத்த தெருவிளக்கை உடைத்தான். அனைவரும் உறங்கியதால் விளக்கு உடைந்தமை யாருக்கும் தெரியாது. விளக்கு உடைந்ததால் வெளிச்சமே இல்லாது கடும் இருட்டாக இருந்தது. மறுநாள் காலையில் மக்கள் விளக்கு உடைந்திருப்பதைக் கண்டனர்.

அதை கிராமத்தின் நீதிபதியிடம் சென்று கூறினார்கள். நீதிபதி அனைவரையுமே நீதிமன்றத்திற்கு அழைத்தார். அனைவரும் அங்கு சென்றனர். குமரனும் மாறனும் அங்கு சென்றிருந்தனர். குமரனின் அடிமை "மாறன் தெருவிளக்கை உடைத்தான்; அதை நான் கண்டேன்" எனப் பொய் கூறினான். ஆனால் மக்கள் அதை நம்பவில்லை. வழக்கு இவ்வாறு தொடர்ந்தது.

நீதிபதி : மாறனே! நீர் தெருவிளக்கை உடைத்தீரா?

மாறன் : நான் விளக்கை உடைக்கவில்லை.

நீதிபதி : (குமரனின் அடிமையிடம்) நீர் எப்போது மாறன் உடைத்ததைக் கண்டீர்?

அடிமை : மாறன் விளக்கை உடைத்துவிட்டு அங்கிருந்து தனது வீட்டிற்குச் செல்லும்போது பார்த்தேன்.


(அந்தத் தெருவிற்கு ஒரே ஒரு விளக்கு இருப்பதால் விளக்கு உடைந்ததும் சிறு ஒளிகூடத் தெரியாது என்பது நீதிபதிக்குத் தெரியும். அதனால் மாறன் விளக்கை உடைத்தபின் யாராலும் அவனைக் காணமுடியாது. அதனால் அடிமை பொய் கூறியுள்ளான் எனத் தீர்மானித்தார்.

நீதிபதி : (அடிமையிடம்) மாறன் விளக்கை உடைக்கவில்லை. நீதான் உடைத்திருப்பாய். உண்மையைக் கூறு.

அடிமை உண்மையை ஒப்புக்கொண்டான். குமரன் தான் விளக்கை உடைக்கும்படி கூறினான் என்றான். குமரன் தலை குனிந்தான். நீதிபதி குமரனுக்குத் தண்டனை வழங்கினார். மக்கள் மாறனின் நேர்மையையும் நீதிபதியின் புத்திக்கூர்மையையும் பாராட்டினர்.

*நிவேதா மகாலிங்கசிவம்*
தரம் 5,
யா/ உடுவில் மகளிர் கல்லூரி.

## வெள்ளை முயல்





வெள்ளை முயலே ஓடி வா
வேகமாக ஓடிவா
துள்ளித் துள்ளி என்னிடம்
தீனி தின்ன ஓடிவா.

பஞ்சு போல உன்னுடல்
பார்க்க ஆசை கூட்டுதே
நெஞ்சில் உன்னை வைத்துநான்
கொஞ்சி விளையாடுவேன்.

கூட்டில் உன்னைப் போட்டுநான்
கொடுமை செய்யவில்லையே!
வீட்டில் எங்கும் சுற்றலாம்
வீணாய் அச்சம் நீ கொள்வதேன்?

*கு. கஜனானன்*
தரம் 1,
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

## தெரிந்து கொள்ளுங்கள்!



1) மிகக் கூடிய காலம் உயிர் வாழும் உயிரினம் எது?
**ஆமை.**
2) நீர் அருந்தாத மிருகம் எது?
**கங்காரு**
3) நீர் அருந்தாத பிராணி எது?
**எலி**
4) கண் தெரியாது இரவில் நடமாடக்கூடிய இனம் எது?
**வௌவால்**
5) கண் இமைகள் மேலிருந்து கீழ்நோக்கி மூடும் ஆனால் கீழிருந்து மேல்நோக்கி இமை கொண்டது எது?
**கோழி**
6) இமை மூடப்பட்டிருந்தாலும் பார்க்கக்கூடிய விலங்கு எது?
**ஒட்டகம்**
7) உலகில் தற்போதுள்ள மிகப்பெரிய விலங்கினம் எது?
**நீலத்திமிங்கிலம்**
8) தவளை முட்டையின் நிறம் என்ன?
**கறுப்பு**
9) சீயம் என அழைக்கப்படுவது எது?
**சிங்கம்**
10) வேகமாக ஓடும் பறவை எது?
**தீக்கோழி**

*இ. ஓவியா*
தரம் 3,
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை.

EUT
EQUIP UNIT TRUST
தளபாட விற்பனை நிலையம்
T.P: 021 2240110
சிறுவர் அரங்கம் சிறக்க சிறுவர் மனங்கள் சிறக்கும்




Chunnakam East, Chunnakam.
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம்.

உன்முகம் அழகாக இருக்க கோபத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ். வி. முருகேசு ஆதரவில்

# மருத்துவ அரங்கு

## சிறந்த ஊட்டச்சத்து ஆட்டுப்பால்



சி. கார்த்தீபன
க.பொ.த (உ/த) 2010,
யாழ். மத்திய கல்லூரி,

ஆட்டுப்பால் தாய்ப்பாலுக்கு அடுத்ததாக இருப்பதாலும் விசேடமாகச் சிறுவர்களுக்கும். உடல் நலமற்றவர்களுக்கும் இலகுவாக சமிபாடு அடையக்கூடியதாகவும் உள்ளது. ஏனெனில் இது மாட்டுப்பாலைவிட சிறிய கொழுப்பு மூலக்கூறுகளைக் கொண்டுள்ளது.

ஆட்டுப்பாலில் மிக அதிக கல்சியம் அடங்கியிருப்பதால் எலும்புகளின் வளர்ச்சிக்கும் பலத்திற்கும் முக்கியமானதாகக் கருதப்படுகின்றது. ஒருவருக்கு தினசரி 33வீதம் கல்சியம் தேவைப்படுகிறது. இது ஒரு கிண்ணம் ஆட்டுப்பாலில் அடங்கியுள்ளது. மாட்டுப் பாலைவிட ஆட்டுப்பால் 13 வீதம் கல்சியத்தையும் 23வீதம் அதிக விற்றமின் **B6**, 47 வீதம் அதிக மிற்றமின் **A**, 134 வீதம் அதிக பொட்டாசியம் 3 மடங்கு நயாசின், 4 மடங்கு செம்புவையும் கொண்டுள்ளது.



ஆட்டுப்பாலானது குழந்தைகளின் சமிபாட்டுத் தொகுதியைத் தூண்டுவதனால் அது வளர்ச்சியடைவதற்கும், தன்னைத்தானே சுகப்படுத்திக் கொள்வதற்கும் உதவுகின்றது. மாட்டுப்பாலைப் பாவிப்பதற்குப் பதிலாக ஆட்டுப்பாலைப் பருகுவது மீண்டும் மீண்டும் வரும் காதுகளில் ஏற்படும் நுண்கிருமித் தாக்கங்கள், ஆஸ்மா, எக்ஸிமா மற்றும் வாதநோய்களையும் குறைக்க உதவும். புற்றுநோயைத் தடுக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளதாக ஆய்வாளர்களினால் கண்டுபிடிக்கப்பட்ட விற்றமின் **A** ஆனது ஆட்டுப்பாலில் பெறுமதி உள்ளதாக விற்றமின் உள்ளது. ஆட்டுப்பாலில் றிபோவினோவின் அடங்கியுள்ளதால் இது மைக்கிறேன் தலைவலியால் பாதிக்கப் பட்டுள்ளவர்களுக்கு சிறந்த நிவாரணியாகக் காணப் படுகின்றது.

சமிபாட்டுத்தொகுதிக்கு இதமானதால் ஆட்டுப்பால் வயிற்றுப்புண்ணுக்கும் இரைப்பை அழற்சிக்கும் சிறந்ததென சிபார்சு செய்யப்படுகிறது. ஆட்டுப்பால் பொட்டாசியத்தை அதிகளவில் கொண்டுள்ளது. இதனால் இது இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்த உதவுகின்றது. ஆட்டுப்பாலில் காரம் pH கொண்டுள்ளது. இது வயிற்றில் அமிலத்தை உருவாக்குவதில்லை. அமிலமானது களைப்பு, தலைவலி, தசைவலிகள் அதிக உடற்பாரத்திற்கும் காரணமாக அமைகின்றது. ஆட்டுப்பால் குறைந்த ஒவ்வாமைத் தன்மையைக் கொண்டுள்ளது. அதாவது மாட்டுப்பாலில் உள்ள அதிக புரதங்கள் ஒவ்வாமையைத் தோற்றுவிக்கின்றன.

# மாணவர்களின் சுகநல வாழ்வில் சுகாதார மன்றத்தின் அவசியம்

Dr. ப. நந்தகுமார் M.B.B.S
*யாழ் போதனா வைத்தியசாலை.*

சுகநலம் (Health) என்ற எண்ணக்கரு வெறுமனே நோயற்ற வாழ்வை மட்டும் குறித்து நிற்காமல் அவருடைய முழுமையான உடல், உள, சமூக மற்றும் ஆன்மீக நல்வாழ்வினைச் சுட்டி நிற்பதாகும். அந்த ரீதியில் மாணவரிடையே சுகநலச் செயற்றிட்டங்களுக்கான அறிவு, திறன், மனப்பாங்கு, நடத்தைக்கோலம் என்பவற்றை வளர்த்தெடுப்பதற்காக சுகாதார திணைக்களமும் கல்வித் திணைக்களமும் இணைந்து நடைமுறைப்படுத்தும் ஒரு கூட்டுற் செயற்றிட்டமே சுகா்தார மன்றம் ஆகும்.

ஒருவருடைய பிற்கால வாழ்க்கையை ஆற்றல் மிகுந்ததாக, ஆளுமை உடையதாகப் பரிணமிக்கச் செய்வதில் மாணவப் பருவமே அடிநாதமாக விளங்குகின்றது. ஆதலினால் சுகவாழ்வுச் சிந்தனைகளை இப்பருவத்தில் விதைப்பதற்கான ஒரு அறிவுபூர்வமான விஞ்ஞான ரீதியிலான ஒரு பொறிமுறை தேவையானதாகும். இத்தகைய பொறிமுறையாக விளங்குகின்ற சுகாதார மன்றம் மூலம் பாடசாலை சுகாதார வேலைத் திட்டத்தை மட்டுமன்றி அதனுடன் இணைந்த சமூகத்தின் சுகநல விழிப்புணர்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியும்.

இந்த மன்றத்தின் கட்டமைப்பை எடுத்து நோக்கின் பாடசாலையில் இயங்கிவரும் ஏனைய மன்றங்கள் போன்று தலைவர், செயலாளர், பொருளாளர், பத்திராதிபர் உள்ளடக்கிய செயற்குழுவும், அதிபர், பொறுப்பாசிரியர் போன்றவர்களுக்கப்பால் பொதுச் சுகாதாரப் பரிசோதகரையும் ஆலோசகர்களாகக் கொண்டிருக்கும். பிரதான செயற்குழு உறுப்பினரைத் தெரிவு செய்யும்போது தரம் 10 அல்லது தரம் 12இல் தெரிவு செய்வதனூடாக க.பொ.த. (சா/த), க.பொ.த (உ/த) மாணவர்களின் பரீட்சைப் பழுவினால் ஏற்படும் பாதிப்பினையும் செயற்றிறனின்மையையும் தவிர்த்துக் கொள்ள முடியும். செயற்குழுவில் ஒவ்வொரு வகுப்பிற்கும் மாணவ பிரதிநிதிகளும் விசேட செயற்பாடுகளுக்கு உப குழுக்களும் இருப்பது செயற்பாடுகளை வெற்றிகரமாக சகல மாணவர்களுக்கும் எடுத்துச்செல்ல உதவும்.

செயற்றிட்டங்களாக நோய்களுக்கெதிரான விழிப்புணர்வு நடவடிக்கைகள், பாடசாலைச் சூழலைச் சுத்தமாகப் பேணும் நடைமுறைகள், சுகவாழ்வுத் தோட்டம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

நோய்களுக்கெதிரான விழிப்புணர்வு நடவடிக்கையில் முன்னோடி ஆரம்பநிலைத் தடுப்பு முறைகளை (Primodial Prevention) மேற்கொள்வதற்கு மிகவும் வாய்ப்பான கட்டமைப்பு சுகாதார மன்றமே ஆகும். பிற்காலத்தில் ஏற்படும் பாரிய நாட்பட்ட நோய்களான சலரோகம் (நீழிழிவு), உயர்குருதியமுக்கம், இதய நோய்கள் ஏற்படுவதற்கு ஏதுவான தவறான உணவுப்பழக்கம், உடற்பயிற்சியின்மை, மன அழுத்தத்துடன் கூடிய வாழ்க்கைக்கோலம், மது, புகைப்பிடித்தல் பழக்கம் என்பவற்றை வெற்றிகொள்வதற்கான விழிப்புணர்வுச் செயற்றிட்டத்தை மாணவர்களிடையே மேற்கொள்வது பிரதானமானதாகும். இதற்கு இம் மன்றத்தினூடு குறைந்தபட்சம் வாராந்தம் காலைப் பிரார்த்தனையில் இத்தகைய சிந்தனைகளை மாணவர் மூலமாகவோ, ஆசிரியர் மூலமாகவோ மட்டுமன்றி பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகர், வைத்தியர்கள் மற்றும் ஏனைய சுகாதார உத்தியோகத்தரின் கருத்துரைகள் மூலமாகவும் மேற்கொள்ள முடியும்.

தனிநபர் சுகாதாரம், பற்சுகாதாரம் போன்ற விடயங்களைப் படங்களினூடு சுவரொட்டிகளாக வகுப்பறைகளிலும் விளம்பரப் பலகையிலும் காட்சிப்படுத்த முடியும். வாராந்த சுகாதாரம் சம்பந்தமான வினா–விடைத் தொகுப்பை விளம்பரப்பலகையில் காட்சிப்படுத்துவதோடு தவணை முறையில் சுகாதாரப்புதிர் போட்டியை காட்சிப்படுத்தப்பட்ட தகவல்கள் உள்ளடக்கிய ரீதியில் மேற்கொள்வது மாணவரிடையே சுகாதார அறிவை மேம்படுத்தும்.


மாதாந்தம் சுகநல எண்ணக்கருக்களை பிரதிபலிக்கும் இயல், இசை, நாடகம் அடங்கிய சுகவாழ்வு விழாக்களை மன்றத்தினால் ஏற்பாடு செய்யமுடியும். இது மாணவர்களின் ஆளுமையை வளர்க்கப் பெரிதும் உதவும்.

பாடசால்லையில் சிறிய வீட்டுத்தோட்டம் ஒன்றை மேற்கொள்வதன் மூலம் சுகவாழ்வுச் சிந்தனைகளான ஆரோக்கியமான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வழிமுறையையும், காய்கறிகளினூடாகக் கிடைக்கும் போசனைப் பெறுமானம், நோயற்றதன்மை என்பவற்றையும் தோட்டத்தினூடு கிடைக்கும் உடற்பயிற்சி, உள ஆரோக்கியம் போன்றவற்றையும் மணாவரினூடாக அவர்களின் குடும்பத்திற்கும் சமூகத்திற்கும் எடுத்துச் செல்ல முடியும். இதுமட்டுமன்றி பாடசாலைத் தோட்டத்தின் மூலம் திண்மக் கழிவுகளான குப்பை கூளங்களை சேதனப் பசளையாக உபயோகிக்க முடிவதனால் எமது பிரதேசத்தை ஆட்டிப்படைத்துவரும் நுளம்பினால் பரவும் தொற்றுநோய்களான டெங்கு போன்றவற்றை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவர முடியும். மேலும் மூலிகைகள் பற்றிய அறிவையும் மாணவரிடையே ஏற்படுத்த பாட சாலைத்தோட்டம் வழிவகுக்கும். இதற்கு பல்கலைக்கழக சித்தமருத்துவ பீடத்தினதும் விவசாய பீடத்தினதும் நிபுணத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சுகாதார எண்ணக்கருக்களைப் பற்றிய ஐயப்பாடுகளை நிவர்த்தி செய்வதற்கும், செயற்பாடுகளை வலுவூட்டுவதற்கும் மருத்துவ ரீதியிலான ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் சமுதாய மருத்துவத்துறையையும், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையையும்அணுகி பயன்பெற முடியும். இவர்களிடம் மருத்துவ, சுகவாழ்வுத் துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், சஞ்சிகைகள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

இத்தகைய அரிய பல அம்சங்களைக் கொண்டிருக்கும் சுகாதார மன்றங்களைச் சீரியமுறையில் ஒழுங்கார்ந்த ரீதியில் தொடர்ச்சியான செயற்பாடுகளினூடு இயக்குவதனூடாக எமது சிறார்களுக்கு வளமான சுகாழ்வை வழங்கமுடியும் என்பதில் ஐயமில்லை.

☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☺☺☺☺☺



உ
முருகன் துணை

S.V. MURUGESU S.V. முருகேசு

Agent for
*Unilever Sri Lanka Ltd.*
*Energizer Lanka Ltd.,*
*Fonterra Brand Lanka (Pvt) Ltd.,*
*Maliban Biscuit Manufactories Ltd.,*
*Shell Gas Lanka Ltd.*

எம்மிடம் அனைத்துப் பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

T.P.: 222 2911, 222 2202

154, Hospital Road, Jaffna.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவத்தமிழ் ஆதரவில் ஆன்மீக அரங்கம்

## அன்பே சிவம்! சிவமே தமிழ்!!



# ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்

**பேராசிரியர் கலைவாணி இராமநாதன்**
இந்து நாகரிகத்துறை, யாழ். பல்கலைக்கழகம்.

இந்து சமயக் கல்வி செல்நெறியானது புராதன காலம் முதல் சமய வாழ்வியலுடன் பின்னிப் பிணைந்திருந்தது. கல்விச் செல்வத்தின் இன்றியமையாமை பற்றி அறநூல்களும் தர்மசாத்திர நூல்களும் ஏராளமாக இயம்பியுள்ளன. சமயக்கல்வி, உலகியற் கல்வி, மெஞ்ஞானக் கல்வி என அவை புராதன காலம் கற்பிக்கப்பட்டு வந்தன. அக்காலத்தில் ஆரண்யகங்களும் பள்ளிக்கூடங்களாக விளங்கின. நாட்டை ஆளும் மன்னர்கள், அரச குமாரர்கள் முதல் அந்தணச் சிறார்கள், ஏனைய வகுப்பினரும் ஆச்சிரமம் சென்று சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்து வல்லவர்களாகவும் நல்லவர்களாகவும் தம்மை ஆக்கிக்கொண்டனர். நாட்டை ஆட்சி புரிவோரும், ஆசிரியர்களும், வைத்தியர்களும் கட்டாயமாக தத்துவ சாஸ்திரம் படிக்கவேண்டும் என தர்மசாத்திர நூல்கள் விதித்துள்ளன.

பாண்டவர்களும், தசரத மன்னனும், ஜனக மகாராஜாவும், துவாரகை மன்னன் ஸ்ரீ கிருஷ்ணனும் கூட இளவரசர்களாக இருக்கும்போது ஆரண்யகம் சென்று குருவிடம் கல்வி பயின்று வந்துள்ளனர். கல்வி கற்கும் செயற்பாட்டிலே புராதன காலம் மனனக் கல்விப் பயிற்சிக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. ஆன்மவித்தை பற்றியவிடத்து இயற்கையே சிறந்த கல்விக்கூடமாகவும் இயற்கையிடத்திலே கற்றுக்கொள்ளவேண்டிய அறநெறிக் கல்வி பற்றியும் அவற்றிற்கான செயல்முறைப் பயிற்சிகளும் குருவின் கல்விக் கூடத்தில் வழங்கப்பட்டன. சான்றாக பசுக்களை மேய்த்தலும் உயிர்களிடத்து அன்பு செலுத்துவதும் இயற்கை வளங்களைப் பராமரிப்பதும், ஓய்வு நேரங்களில் பழக்கப்படுத்தப்பட்டன. உபநிடத காலத்தில் ஆலம் விதை மூலமும், உப்பும் நீரும் கொண்டும் கூட ஆத்ம தத்துவம் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டு செயல்முறை விளக்கமும் அளிக்கப்பட்டது.

கற்றல் செயற்பாட்டிலே குறிப்பாக பாடம் படித்தல், பாடத்தை கற்றல் எனக் குறிப்பிடாது பாடமுறையினை 'ஓதுதல்' என்பதே உயர்ந்த வழிமுறையாகப் போதிக்கப்பட்டது. வேதநூல்கள் கல்வி கற்கும் பருவத்தை பிரமச்சரியம் அல்லது மாணவநிலை என வகைப்படுத்தி ஏறக்குறைய ஐந்து வயது முதல் பன்னிரண்டு வயதுவரை ஆரம்பக் கல்வியும், ஆன்மீகக் கல்வியையும் இணைத்தே போதித்தனர். வேதம் படித்தல் எனக் குறிப்பிடாது 'வேதம் ஓதுதல்' என்றே குறிப்பிடப்பட்டது. வேதக்கல்வி பயிலும் மாணவர்கள் மண்டூகம் எல்லாம் ஒன்றாகக் கத்துவதுபோல வேதபாடல்களை சத்தம்போட்டு ஓதி வந்தனர் என ரிக்வேதம் சுட்டும். "வேதம் ஓதி வெண்ணூல் பூண்டு வெள்ளை எருதேறி" என்று இதனைச் சம்பந்தர் பாடினார். 'ஓதுதல்' என்பது மனனம் செய்தல் என்பதாகும்.

மனதிலே மீண்டும் மீண்டும் உயர்ந்த சிந்தனைகளைப் பதிவாக்கிக் கொள்ளுதலாகும். இன்று மூளையை கணணிக்கு இடம்மாற்றி அதிலே யாவற்றையும் பதிவு செய்துவிட்டு மூளையை வெறுமையாக்கி வைக்கும் நிலைதான் பெரிதும் காணப்படுகிறது. 15ம் 15ம் = 30 என்பதற்கும் கல்குலேற்றர் தேவைப்படும் காலமாகி விட்டது. வேதாகமக் கல்விக் காலத்தில் கற்றல் செயற்பாட்டிலே சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்றும் அவதாவது கேட்டல், தெளிதல், சிந்தித்தல் என்னும் அவதானிப்பு முறைமைகள் முதன்மைப்படுத்தப்பட்டன. ஔவையாரும் ஆத்திசூடியில் 'ஓதுவதொழியேல்' என்றுதான் குறித்து வைத்தார். நன்னெறி என்ற நூலிலும் 'ஓதாமல் ஒரு நாளும் இருக்கவேண்டாம்' என்பது வலியுறுத்தப்பட்டது.

தேவாரப் பண்ணிசை பயிலும் போதும் பாடம் பண்ணுவது - படிப்பது - கற்பது என்ற சொற்கள் உபயோகத்தில் இருக்கவில்லை. 'பண்ணிசை ஓதல்' என்பது மரபுமுறையாகும். சோழர்காலம் தேவாரத் திருமுறைகளை ஆலயங்களில் பாடுவதற்காக அல்ல - ஓதுவதற்காக - தேவார ஓதுவார்கள் தஞ்சைப் பெரும் கோயில் முதலிய பல கோயில்களில் நியமிக்கப்பட்டனர். 'பஞ்சபுராணம் அருளிப்பாடுக' என்றுதான் இன்று கோயில்களில் சொல்கிறார்கள். அந்தக் காலத்திலே 'பஞ்சபுராணம் ஓதுக' என்றே கூறப்பட்டது. 'காலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது - நாதன் நாமம் நமச்சிவாயவே' என்ற நமச்சிவாயப் பதிகம் இக்கற்றல் பண்பாட்டினை அன்றே சுட்டிக்காட்டியது. இன்று திருக்கோயில்களில் பஞ்சபுராணம் ஓதுவதற்கே ஆளில்லாத பஞ்சமாகிவிட்டநிலை காணப்படுவது வருத்தமான விடயமாகும்.



வேத இலக்கியம் வகுத்துள்ள மாணவன் ஒருவரது கல்விப் பயிற்சியானது ஆசாரியார் அல்லது குருவின் ஆச்சிரமப் பள்ளியில்தான் இடம் பெற்றது. இன்றைய 'ஆசிரியர்' என்ற பதம் அக்காலத்தில் 'ஆசாரியார்' என்றே கூறப்பட்டது. ஆசாரியார் என்றால் ஆசாரம் மிக்கவர். நிறைவான கல்வி ஒழுக்கம் உடையவர் எனப்பொருள் தரும். இன்றைய கல்வியாளரிடம் ஒழுங்கும் - ஓதுவிக்கும் ஒழுங்கு காணப்படாமையாற்போலும் "ஆசாரியார்" என்ற பதம் 'ஆசிரியர்' என்ற சொல்லாக்கம் பெற்றதோ என்பது சிந்தனைக்குரியது. அன்று மாணவன் பயின்ற முதல் பாடம் சந்தியாவந்தனம். காலை மாலை வழிபாடு - காயத்திரி ஓதுதல், ஆசமனம் செய்தல் - கதிரோனுக்கு நீர் வார்த்தலும், தர்ப்பணம் செய்தலுமாகும். இவ்வாறு இயற்கையைப் பேணும் வழிபாடே ஆரோக்கிய வாழ்வின் அத்திவாரம் என ஓதுவிக்கப்பட்டது. புத்தகப் பயிற்சியும் படிப்பும் பிற்காலம் அறிவியல்துறை வளர்ந்தும் ஓதுதல் - கற்றல்; கற்பித்தல் முறைக்கு மாற்றமடைந்தது.

வேதகாலக் கல்வியில் குருவானவர் மாணாக்கர் அருகில் தரையில் அமர்ந்து வேதாசார தருமத்தைச் சொல்லிக் கொடுக்கும் பயிற்சியில் ஈடுபடுவார். தன்னைச் சூழவுள்ள மாணாக்கருக்கு பலமணிநேரம் வாய்ப்பாடமாக பாடல்களைச் சொல்ல மாணவர்கள் அதனைக் கேட்டு அப்பாடல்களை ஒவ்வொன்றாக நெட்டுரப்போட்டு குருவானவருக்கு ஒப்புவித்து வந்தனர். இவ்வாறாக வேதபாடல்களை மனப்பாடமாகும் வரை பாசுரங்கள் திருத்தமாக செய்தற்பொருட்டு பல வழிகளிலும் பாடமோதப்பட்டன. பின்னர் அவற்றினைத் தனித்தனியாகப் பதம் பிரித்தும் (பதமுறை) சொற்களில் ஒன்றைவிட்டு ஒன்றைக் கூட்டி இரண்டாக இணைத்தும் (கிரம பாடம்) ஒழுங்குபடுத்தியும் பாடமோதி வந்தனர். வேதநூல் கல்வியில் கற்பம், சிட்சை, வியாகரணம், சந்தம், நிருத்தம், சோதிடம் என்பவை சிறப்பாக அறிவுறுத்தப்பட்டன. ஏனைய வானியல், கணிதம், இலக்கியம், மருத்துவம் போன்ற உலகியல் பாடங்களும் சொல்லிக் கொடுக்கப்பட்டன.

காலப்போக்கில் சிறப்பெய்திய அறிவு சார்ந்த ஆசாரியர்களால் இடைக்காலத்தில் கல்வி பயிற்றப்பட்ட நிலையங்களில் காசி என்றும் வாரணாசி, பாரதநாட்டின் வடமேற்கிலே தட்சசீலமும், பீகாரில் நாலந்தாவும், சமய ஆன்மீகக்கல்வி போதிக்கும் உயர் பல்கலைக்கழக நகரங்களாகவும் விளங்கின. புராதன இலக்கண ஆசிரியர் பாணினியும், அர்த்த சாஸ்திரமும் தந்த கௌடியல்யரும் மருத்துவக் கலையில் புலமை பெற்று விளங்கிய சாகரம் தட்சசீலப் பல்கலைக்கழகத்துடன் தொடர்புகொண்ட புகழ்பெற்ற பேரறிஞர்கள் என்பது அனைவரும் அறிந்த விடயமாகும். இன்றைய உலகில் இவர்கள் வாழ்ந்திருந்தால் நோபல் பரிசே அவர்கட்கு அறிஞர் உலகம் வழங்கியிருக்கும். இவ்வாறு இந்துக்களின் கல்விச் சிந்தனையில் ஆன்மீகக்கல்வி, ஒழுக்கக்கல்வி, தொழிற்கல்வி, படைக்கலப் பயிற்சிக் கல்வி என பன்முகப்படுத்தப்பட்ட வாழ்வியலை வளமாக்கும் பண்பாட்டுக் கல்விநெறி முதன்மைப்படுத்தப்பட்டது. இன்றைய கல்விமுறை உள்ளத்தை புத்தக உள்ளடக்கத்தால் நிரப்புவதும் பரீட்சை மண்டபத்தில் அவற்றினை வெளியேற்றுதலும் பின்னர் வெற்று உள்ளத்தோடு வீடு திரும்புவதுமாக அமைகிறது. உண்மைக் கல்வி உள்ளத்தை பண்படுத்துவ தனைத் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதனை மனித மேம்பாட்டுக் கல்வியாளர்களும் வெளிப்படுத்துவ திலிருந்து தற்காலக் கல்வி பண்பாட்டு விழுமியங்களி லிருந்து விலகிச் செல்வதனை உணரமுடியும். மீண்டும் எமது இளம் சிறார்களிடம் கல்வியுடன் இணைந்த ஒழுக்கப் பண்பாடு வளரவேண்டுமெனில் புராதனக் கல்விச் சிந்தனைக் கருவூலமான 'ஓதுவது ஒழியேல்' என்ற வரன்முறைக் கல்விச் செயற்பாட்டை பாலர் வகுப்பு முதல் 5ம் ஆண்டுவரை அறிமுகப்படுத்துவது அவசியமாகும்.

'ஓதுவித்தவர் கூலிகொடாதவர் - மாதவர்க்கதி பாதகமானவர்' என்கிறார் வாரியார் சுவாமிகள். கடல் நீரை மேகம் பருகி உவர்நீரை நன்னீராகப் பொழிவது போல குருவானவர் கல்வி என்னும் கரையாகிய கடலைக் கடைந்து மாணவர் பக்குவ நிலைக்குத் தக்கவாறு ஓதுவித்துக் கொடுப்பார். அற நூல்களை ஓதும்போது ஐயம், திரிபு, மயக்கம் முதலிய முக்குற்றங்களை விலக்கி ஓதுதல் வேண்டும். "ஓதலின் நன்று ஒழுக்கமுடைமை", ஓதார்க்கில்லை ஒழுக்கமும் உயர்வும், ஆர்கலி உலகத்து மக்கள் எல்லாம் ஓதலில் சிறந்தன்று ஒழுக்கமுடைமை என முதுமொழிக்காஞ்சி என்ற நூலும் ஓதுவதன் பயனைத் தெளிவாக உணர்த்திற்று.

ஓதுகின்ற நாட்கள் குற்றமற்றவையாக அமைய வேண்டும் என்பது ஔவையார் கூறும் விதிமுறையாகும். "அட்டமியில் ஓதினால் ஆசானுக்காகாது - சீடருக்கு பதினான்கு தீதாகும், கெட்டவா, வித்தைக்கு நாசமாம் பிரதமையில் - பித்தரும் பேசார் பிழை" என்பது கல்வியாகிய ஓதுகின்ற கலையினை நல்ல நாளில் ஆரம்பிக்க வேண்டும் என்ற அறிவுரையாகவுள்ளது. எனவே உலகியற் கல்வியுடன் ஞானவித்தையையும் அறநூல்களையும் அறிவை ஞானமாக்கும் அறநூல்களையும் தேவார திருவாசகங்களையும் பண்ணோடு ஓதி வருதலால் ஆத்மவித்தையும் ஆனந்தமும் சித்திக்கும்.

### மந்(தை)திரி மனையாம்....



ஜேர்மனியிலிருந்து வெளிவரும் ஆன்மீகக் காலாண்டிதழ்

**சிவத்தமிழ்**

M. K. S. Sivakumaran
Bost Box 2765,
58477 Ludenschied,
Germany.

அறிவியலலோடு ஒட்டிய ஆன்மீகக் கட்டுரைகளை வரவேற்கின்றோம்.

மின்னஞ்சல்: Vettimaniy@hotmail.com.
00492351 458862



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு அரங்கு



அமரர் குரும்பசிட்டி செ. லோகதாசன் ஞாபகார்த்த விளையாட்டரங்கம். (முன்னாள் உதைபந்தாட்ட வீரர் மகாஜனக் கல்லூரி)

## பாரம்பரிய கிராமிய விளையாட்டுக்கள்



திரு. சு. இளங்கோவன்
B.A., Dip.in. SBM, Dip.in SSC, Dip.in. FSC, Spl.Trd. (WR)
ஆசிரியர்,
யா/ மண்டதீவு மகாவித்தியாலயம்.

இன்றைய நிலையில் பல கிராமங்களுக்குச் சொந்தமாக இருந்த அல்லது கிராமத்து இளைஞர்களாலே விளையாடப்பட்டுவந்த கிராமிய விளையாட்டுக்கள் வழக்கொழிந்து அருகி, ஏன் அடியோடு மறைந்துவிட்ட நிலையைப் பார்க்கமுடிகின்றது. அன்று வழக்கிலிருந்த இளைஞர்கள் விளையாடிய விளையாட்டுக்கள் இன்று இல்லை.


இக்கால இளைஞர்களுக்கு அந்த விளையாட்டுக்களின் பெயர்கள் தெரியுமோ என்று சந்தேகப்படவேண்டியுள்ளது. ஆகவே கிராமத்துக்குரிய மக்களால் விரும்பி விளையாடப்பட்ட கிராமிய விளையாட்டுக்களான கிளித்தட்டு, கிட்டிப்புள்ளு, பிள்ளையார் பேணி, கப்பல் பாத்தி, எட்டுப்பாத்தி, மாங்கொட்டை தட்டுதல் (நாலு பாத்தி), மாட்டுவண்டிச் சவாரி, பட்டம் விடுதல், போர்த்தேங்காய் அடித்தல், நாயும் இறைச்சியும், அன்ன ஊஞ்சல் ஆடுதல், கொக்கான், பாண்டி, தாயம், குளங்கரை போன்ற பல,விளையாட்டுக்கள் ஆரம்ப கால விளையாட்டுக்கள் என்று அறியப்படுகின்றது. எனவே அவ்விளையாட்டுக்கள் பற்றியும் அவை விளையாடப்பட்ட முறை பற்றியும் நோக்கவேண்டியது அவசியமாகின்றது. சென்ற இதழ்களில் கிளித்தட்டு, கிட்டிப்புள்ளு, புள்ளுக்கிட்டி, நாயும் இறைச்சியும் என்பன பற்றி எடுத்து நோக்கப்பட்டது. இவ்விதழில் கொக்கான், பாண்டி ஆகிய விளையாட்டுக்கள பற்றி எடுத்து நோக்குவோம்.

**கொக்கான்**

இவ்விளையாட்டு கூடுதலாக பெண்களால் வீட்டுத் திண்ணைகளிலும் முற்றங்களிலும் இருந்து விளையாடப்படும் ஒரு விளையாட்டாகும். இது ஐந்து கற்கள் அல்லது சோகிகளை நிலத்தில் வைத்து, ஒவ்வொரு காயாக எறிந்து புறங்கையில் விழச் செய்து, புறங்கையில் விழுந்தவற்றை எடுத்து வைத்து பின்பும் விளையாடுவர். இவ்வாறு இரண்டு மூன்று என எடுத்தும், பின் ஒவ்வொரு கல்லையும் ஒவ்வொரு கல்லால் மாற்றி (கல் மாற்றல்) எடுப்பர். பின் இரண்டு இரண்டு கல்லாய் கொத்தி (சொபசொப்) என எடுப்பர். பின் 5 கல்லையும் உள்ளங்கையில் வைத்து புறங்கையால் ஏந்துவர். ஏந்தினால் 100 புள்ளியாகக் கருதப்படும். அவ்வாறு ஏந்தும்போது தவறினால் விளையாடுபவர் ஆட்டமிழக்க மற்றவர் விளையாடுவர்.

**பாண்டி**

8 சிறு குழிகளை நிலத்தில் இட்டு அல்லது 8 வட்டங்களை தரையில் கீறி எட்டுக்குழியிலும் பத்துப் பத்தாக புளியங் கொட்டைகளைப் போட்டு ஒவ்வொரு பாத்தியாக நகர்த்தி விளையாடுவர். இரண்டு வட்டங்கள் மேலதிகமாக ஆட்டக்காரர் காய்களை வைக்க எனக் கீறப்படும். தங்கள் பக்கத்தில் இரண்டு காய்களை எடுத்து விளையாடுவர். தாங்கள் காய் சேர்க்கும் குழிக்குள்ளும் ஒவ்வொரு காய் போடப்படும். அக்காய்களை போட்டுக் கொண்டு போகும்போது கடைக்காய் வெறும் குழியில் வருமாயின் அவர் ஆட்டமிழப்பார். பின் அடுத்தவர் விளையாட ஆரம்பிப்பார். இவ்வாறு விளையாடுபவர்களில் அதிக காய்களைச் சேர்த்தவர் 4 குழிக்கும் போட்டுபோக மிச்சத்தை எடுத்து வைப்பர். ஏனையவர் காய் இல்லாத குழியை மூடிவிடுவர். இவ்வாறு எதிர்ப்பக்கத்தவருக்கு குழியோ, காயோ இல்லாது செய்வதே வெற்றி தோல்வியைத் தீர்மானிக்கும்.




## நிகழ்வின் நிழல்கள்





யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி இல்லமெய் வல்லுநர் போட்டியின் போது விருந்தினர்கள் பாண்ட் வாத்திய அணி வகுப்புடன் வரவேற்கப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருதிருமதி ஸ்ரீதயாளன தம்பதியினரையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை மற்றும் கல்லூரி அதிபர் திருமதி.வேதநாயகி பேரின்பநாதன் அவர்களையும் படங்களில் காணலாம்.

## சுட்டிப்பையன் கெட்டிக்காரன்



செல்வன்.தவராஜசிங்கம்.சந்தோஷ்

வளரும்பயிரை முளையில் தெரியும். வளரும் நம் சிறார்களை புலம்பெயர் நாட்டில் அவதானிக்கின்றோம். அவர்கள் கல்வியிலும், விளையாட்டிலும் சிறந்து வளர்வதைப் பார்க்க மகிழ்ச்சியாக உள்ளது.

யேர்மனியில் அந்நியமொழியில் புலமைபெற்று புலம்பெயர்ந்து வாழும் பெற்றோருக்குப் பெருமை சேர்க்கும் பிள்ளைகளின் திறன் அனைத்து உலகத் தமிழரையும் மகிழ்விக்கும் ஒன்றாகும்.

யேர்மனியில் 2001 Kathe-Kollwitz-Gymnasium, Dortmund பள்ளியில் 7ம் வகுப்பு படிக்கும் செல்வன் தவராஜசிங்கம் சந்தோஷ் யேர்மன் மொழி, ஆங்கிலம், லத்தீன்மொழி, பிரெஞ் மொழி, சங்கீதம், ஓவியம், சரித்திரம், புவியியல், கணிதம், இரசாயனம், உயிரியல், விளையாட்டு ஆகிய பன்னிரண்டு பாடங்களிலும் (வகுப்பு 7 - 2010/2011) மிகவும் சிறப்பு (sehr gut) என்ற பேறு பெற்றுள்ளார். சந்தோஷின் சந்தோஷம் எங்களையும் சந்தோஷத்திற்குள்ளாக்குகின்றது.

அவர் கல்வியிலும் விளையாட்டிலும் மேலும் சிறந்து விளங்க வெற்றிமணியின் வாழ்த்துக்கள்.

## துடுப்பாட்டம் (Cricket)



1. கனவான்களின் விளையாட்டு எனப்படுவது கிரிக்கெட் ஆகும்.
2. கிரிக்கெட்டின் தாயகம் இங்கிலாந்து ஆகும்.
3. கிரிக்கெட் துடுப்பாட்ட மட்டை "வில்லோ" மரத்தால் செய்யப்படுகிறது.
4. கிரிக்கெட் சம்பந்தமான தரவுகளைத் தரும் நூல் "விஸ்டன்" ஆகும்.
5. கிரிக்கெட் உலகின் முதற்பெரும் சாதனையாளர் "டொன் பிரட்மன் ஆவார்.
6. உலகக் கிண்ணப் போட்டிகள் 4 ஆண்டுக்கு ஒருமுறை ICCயினால் நடத்தப்படும்.
7. முதலாவது உலகக்கிண்ணப்போட்டி 1975இல் நடைபெற்றது. இதில் மேற்கிந்தியத் தீவுகள் வெற்றிபெற்றது.
8. முதலாவது டெஸ்ட் போட்டி லண்டன் லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்றது.
9. முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டி 1971இல் அவுஸ்ரேலியாவிலுள்ள மெல்போனில் நடைபெற்றது.
10. இலங்கை அணிக்கு டெஸ்ட் அந்தஸ்து கிடைத்தது 1982இல் ஆகும்.
11. தொடர்ச்சியாக உலகக் கிண்ணத்தை வென்று ஹற்றிக் சாதனை படைத்தது அவுஸ்ரேலியா ஆகும். (1999, 2003, 2007)
12. 1996இல் இலங்கை அணி முதன் முதலாக உலகக்கிண்ணத்தை வென்றது.
13. ஒருநாள் போட்டி ஒன்றில் அதிகூடிய விக்கெட்டுக்களை வீழ்த்தி சாதனை படைத்தவர் சமிந்தவாஸ் (8 விக்கெட்டுக்கள்) இலங்கை - சிம்பாப்வே போட்டியின்போது.
14. சர்வதேச டெஸ்ட் போட்டியில் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றவர் பிறைன் லாறா (400 ஓட்டங்கள்) மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து.
15. ஒருநாள் போட்டி ஒன்றில் 26 பந்துகளை எதிர்கொண்டு சதமடித்த முதல் வீரர் சாஹிட் அப்ரிடி ஆவார்.
15. 20-20 போட்டியில் 06 பந்துகளில் 36 ஓட்டங்களையும் க11 பந்துகளில் அரைச்சதம் பெற்றவர் யுவராஜ் சிங். இந்தியா - இங்கிலாந்து.
16. ஹற்றிக் என்பது 3 தொடர் பந்துகளில் 3 விக்கெட்டைப் பெறுதலாகும்.
17. தொடர்ச்சியாக 4 பந்துகளில் 4 விக்கெட்டைப் பெற்று சாதனையாளர் லசித் மலிங்க 2007 உலகக் கிண்ணப் போட்டியில் இலங்கை - தென்னாபிரிக்கா)

சி. ராகுலன்
தரம் - 7,
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி.

விளையாட்டு உள்ளத்தைப் பண்படுத்துகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவில் மாணவன் சஞ்சீவநாத் நிகழ்த்தியிருக்கும் ஒரு சாதனை!

மனிதன் இயற்கைக்கு எதிராக செயற்கையாகக் கண்டுபிடித்த சில கண்டுபிடிப்புகளினால் சுற்றுப்புறச் சூழல் பாதிப்படைந்து பெரும் இயற்கை அழிவுகள் நடந்துகொண்டிருக்கின்றது.

ஓசோன் படையில் ஓட்டையும் அதிகரித்துள்ள வெப்பமும்காலம்தவறிப்பெய்யும்மழைவீழ்ச்சியும்வெள்ள அனர்த்தம், சுனாமி, பூகம்பம், சூறாவளி, எரிமலைகள் வெடித்துச் சிதறல் போன்ற பல பாதிப்புகளினால் மனிதன் அன்றாடம் உலகில் ஏதோ ஒரு மூலையில் அழிவுகளைச் சந்தித்துக்கொண்டே இருக்கின்றான்.

இயற்கையை மனிதன் சீண்டியதன் விளைவால் இன்று அழிவுகளைச் சந்திக்கின்றான். இவ் உலகில் நிகழும் காலநிலை மாற்றங்களை எவ்வாறு தடுக்கலாம் என வட்டமேசை, சதுரமேசை மகாநாடுகளை நடத்திக்கொண்டிருக்கின்றார்கள் விஞ்ஞானிகள்.

விஞ்ஞானிகள் மட்டுமல்ல சாதாரண குடிமக்களும் இயற்கையின் சீற்றம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கிவிட்டார்கள்.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தில் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயிலும் திருக்கோவிலைச் சேர்ந்த நடராஜா சஞ்சீவநாத் எனும் மாணவன் சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் கார் ஒன்றைக் கண்டுபிடித்துள்ளார்.

இம் மாணவன் கண்டுபிடித்துள்ள இக்காரின் வெள்ளோட்டம் கல்முனை உவெஸ்லி உயர்தரப் பாடசாலையில் பாடசாலையின் அதிபர் வீ.பிரபாகரன் தலைமையில் நடைபெற்றது. அங்கு சமுகமளித்திருந்த கல்வியாளர்கள் அனைவரும் இம் மாணவனது திறமைக் கண்டு வியந்து நின்றனர்.

விஞ்ஞானப் பிரிவில் கல்வி பயின்றுவரும் இம் மாணவன் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை கண்டுபிடிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். வீட்டில்



தனிமையில் இருக்கும் நேரங்களில் தான் எதையாவது இந்தச் சமூகத்திற்காகச் சாதிக்கவேண்டுமென்ற மனநிலையிலே இருப்பதாக அவரது உறவினர்கள் கூறுகின்றார்கள்.

## 22 ஆயிரம் ரூபா செலவில் தயாராகியுள்ள வாகனம்

சூழலில் கிடைக்கும் கழிவுப் பொருட்களைக் கொண்டே சூரிய சக்தியில் இயங்கும் மோட்டார் காரினைத் தயாரித்துள்ளார். இக்காரினைத் தயாரிக்க 22 ஆயிரம் ரூபா மட்டுமே செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் இரண்டுபேர் பயணிக்க முடியும். அங்கவீன மானவர்களுக்கும் சிறு வியாபாரத்தில் ஈடுபடுவோருக்கும் மிகவும் பொருத்தமான பாதுகாப்பான வாகனமாகவும் இது அமையும். மணிக்கு 25 கிலோ மீற்றர் வேகத்தில் செல்லக்கூடியதாக இருக்கின்றது.

இக் காரினைத் தயாரிக்க இவருக்கு ஒரு மாத காலம் ஏற்பட்டிருக்கின்றது. 'நிதி வசதியும் மூலப் பொருட்களும் எனது கைவசம் இருந்தால் மூன்று நாட்களுக்குள் இது போன்ற ஒரு காரினை என்னால் தயாரிக்க முடியும்' என்று தன்னம்பிக்கையோடு கூறுகின்றார் சஞ்சீவநாத்.

வெகுவிரைவில் நீரிலும் நிலத்திலும் பயணிக்கக் கூடிய வாகனம் ஒன்றைத் தாம் தயாரிக்கவுள்ளதாகக் கூறும் இம் மாணவனின் குடும்பம் சாதாரண குடும்பம். இவரது தந்தை தபால் ஊழியராகக் கடமையாற்றுபவர், குடும்பத்தில் மொத்தம் 7 பேர் உள்ளனர். தமது தந்தையின் குறைந்தளவு வருமானத்தைக் கொண்டே தமது குடும்ப சீவியத்தையும் ஓட்டி வருகிறார் சஞ்சீவ்.

திறமையும் வறுமையும் நிறைந்திருக்கும் இம் மாணவனது கண்டுபிடிப்புக்களுக்கும் படிப்பிற்கும் கைகொடுக்க எமது சமூகத்திலுள்ள புத்திஜீவிகளும் தொழிலபதிபர்களும் முன்வருவார்களாயின் எதிர் காலத்தில் ஒரு விஞ்ஞானியை எம்மால் உருவாக்கக் கூடியதாகவிருக்கும்.

பல திறமையான தமிழ் மாணவர்களுக்கு வறுமை ஒரு தடையாக இருக்கின்றது. அதனை நீக்கி அவர்கள் வாழ்வில் ஒளியூட்ட சமூக ஆர்வலர்கள் உதவ வேண்டும்.

பாடசாலைப் பருவத்தில் மாணவர்களது திறமைக்கான அங்கீகாரம் கிடைத்தும் போதிய நிதிவசதியின்றி பல மாணவர்களது திறமைகள் முடங்கிப் போகின்றன. அவ்வாறான ஒருநிலை இம்மாணவனது திறமைக்கும் சவாலாக அமைந்துவிடக்கூடாது.

# வியாபாரத்தில் நட்டத்தையும் இலாபமாக்கத் தெரிந்தவர்கள் யப்பானியர்!



## மாஸ்தா காருக்குள் சிலந்தி வலை!

### மாஸ்தா நிறுவனம் 65,000 கார்களைத் திரும்பப் பெற்றது.

வீட்டில் பார்ப்போம். ஒரு கோப்பையை உடைத்துப் போட்டேன். அட அம்மாவந்து பேசப்போகின்றா? என்ன செய்வது என் பிழையை வேறு யாரில் போட்டு தப்புவது? சரி தம்பி இருக்கிறான். அவன் சின்னவன். அவன் உடைத்தால் அம்மா ஒன்றும் பேசமாட்டா. உடனே தம்பி மீது பிழையைச் சுமத்தி நான் விலகிக் கொள்வேன்.

நாட்டில் பார்ப்போம். வேலை செய்யும் இடத்தில் ஒரு பிழை வந்துவிட்டது. உடனே இது காலை வேலை செய்தவர்களது பிழை, எனது பிழையல்ல என எக்காரணத்தையுமே தேடாமல் சொல்லித் தப்பிக் கொள்வேன். காரணம் தான் ஆயிரம் தேடலாமே! எனக்கென்ன அனுபவம் குறைந்தா போச்சு?

சரி மீண்டும் வீட்டுக்கே வருகின்றேன். ஒரு தேங்காய் கடையில் வாங்கி வருகின்றேன். வீட்டில் தோசைக்கு மா ரெடி. சம்பல் அரைப்போம் என்று தேங்காயை உடைத்தால் நாற்றம் மூக்கைத் தின்னுது. சரி கடையில் திருப்பிக் கொண்டுபோய் கொடுப்போம் என்று போனால், அவர்கள் முகத்தில் மகிழ்ச்சியில்லை.

சரி தேங்காயும், சுவீப்பும் ஒன்று என எண்ணி 3 தேங்காயை வாங்கிக்கொண்டு வந்து வீட்டில் உடைத்துவிட்டு, அதிஷ்டம்அடித்த சந்தோசத்தில் சம்பலையும் அரைத்து வைத்துவிட்டு அப்பாடா என அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்த்தால்.....

52 ஆயிரம் கார்களை ஜப்பான் திரும்பப் பெற்றுள்ளதாம். எங்கிருந்து தெரியுமா? அமெரிக்காவில் இருந்து. காரணம் அதனது பெற்றோல் நிரப்பும் வயிலாக சிலந்தி சென்று வலை பின்னிவிட்டதாம். அட கார்களை அனுப்பி ஆறுமாதம் ஆச்சே! எங்கே எப்படிச் சிலந்திபோய் வலை பின்னியது. எமது கார்களின் பெயர்களைக் கெடுக்க நீங்கள் செய்யும் நாடகமா? எங்களை ஒழிக்கவா வலை பின்னுகிறீர்கள் என பிழையை அவர்கள் மேல் போடாது உடனடியாக அத்தனை வாகனங்களையும் திருப்பி எடுக்கின்றோம் என எடுத்து ஆராய்ந்து என்ன நடந்தது எனக் கண்டுபிடித்துள்ளது ஜப்பான் மஸ்டா கார் நிறுவனம்.

**அதன் முழு விபரமும் இதோ!**

சிலந்தி வலை தொல்லை: மாஸ்தா நிறுவனம் 65,000 கார்களை திரும்பப் பெற்றது. மார்ச் 5,2011 ஒரு குறிப்பிட்ட வகை சிலந்தி புகைக் குழாயில் வலை பின்னுவதால் ஏற்பட்டுள் பிரச்சினையில் மாஸ்தா கார் நிறுவனம் 65,916 கார்களை சந்தையிலிருந்து திரும்பப் பெற்றுள்ளது.

மாஸ்தா-6 எனும் வகைக் காரில் ஒரு வகை சிலந்திகள் புகைக் குழாயில் மட்டும் நுழைந்து கனமான வலை பின்னி புகை வெளியேறவிடாமல் தடை ஏற்படுத்தி வருகின்றன. எனவே, தற்போது விற்று முடித்துள்ள அனைத்துக் கார்களையும் விற்பனையாளர்கள் திரும்பப் பெறுவார்கள் என மாஸ்தா அறிவித்துள்ளது.

"இது என்ஜின் பிரச்சினை அல்ல, வேறு எந்த பாகத்தின் பிரச்சினையும் அல்ல. மஞ்சள் ஸாக் எனும் ஒரு வகை சிலந்தி கார் புகையை மிகவும் விரும்பும் அதிசயம் எங்கள் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. (பல மனிதர்களுக்கும் பெற்றோல் மணம் விருப்பம்) இந்த வகை சிலந்திகள் மிக அடர்த்தியான வலையைப் பின்னுவதால் புகைபோக்கும் குழாயில் அடைப்பு ஏற்படுகிறது. இதன்மூலம் என்ஜின் இயங்குவது தடைப்படுகிறது.

மேலும் 2.5 லிட்டர் வகை கார்களில் மட்டுமே இந்தப் பிரச்சினை உள்ளது. இதனால் அமெரிக்காவில் உள்ள 51,848 கார்கள் திரும்பப் பெறப்படுகின்றன. இவற்றைத் தவிர, போர்டோ ரிகோ, கனடா, மெக்சிகோ ஆகிய நாடுகளில்உ ள்ள இந்த வகை கார்களும் திரும்பப் பெறப்படும். இவற்றின் புகைக் குழாயில் ஒரு சிறு தடை பொருத்தப்பட்டு மீண்டும் இவை வாடிக்கையாளர்களிடம் தரப்படும்" என நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

எனக்கு என்னவோ 65 ஆயிரம் கார்களைவிட இந்த 65 Cents தேங்காய் திருப்பி பெறமுடியாது போனதே பெரிதாக இருந்தது. பிழைகளை பிறர் முதுகில் ஏற்றியே பழக்கப்பட்ட, மாற்றமுடியாத வாழ்க்கை முறை எமதாச்சு.

வியாபாரத்தில் நட்டத்தையும் நன்றாக வியாபாரமாக்கத் தெரிந்தவர்கள் ஜப்பானியர். இப்போ மஸ்டா கார் என்றால் கூடாது என்பதைவிட, அட அவர்கள் சிறுபிழை என்றாலும் புதியகார் தருமளவிற்கு நல்ல நிறுவனம் என்ற நற்பெயரே உலாவுகின்றது.

எத்தனை கோடி டொலர்கள் கொடுத்தாலும் சம்பாதிக்கமுடியாத நற்பெயரைச் சம்பாதித்துவிட்டது.

☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺☺

உன்முகம் அழகாக இருக்க கோபத்தை இழந்துவிடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் பண்பாட்டுச் சின்னங்கள்

## சங்கடன் படலை



எமது பாரம்பரியத்தின் எச்சங்களில் ஒன்றாக இன்றும் மிச்சம் உள்ளவற்றில் முக்கியமானது இச் சங்கடன்படலையாகும். தமிழர்களின் விருந்தோம்பல் பண்பினை சான்றுபடுத்துவதாக இச்சங்கடன்படலைகள் வரலாற்றில் நிலைத்து நிற்கின்றன.

முன்னர் வீடுகள் அமைக்கும்போது தமது வாசலில் படலைக்கு மேலாக கூரையிட்டு அதன் இரு மருங்கிலும் குந்துகளை அமைத்து நீண்ட தூரத்திலிருந்து வருபவர்கள் இளைப்பாறுவதற்கு ஏற்ற விதத்தில் அமைக்கப் பெற்றவையே இச் சங்கடன் படலைகளாகும். அளவில் சிறிதாகவும் பெரிதாகவும் உள்ள இப்படலைகளில் முன்னர் மண் பானைகளில் களைப்புற்றோர் பருக குளிர்நீர் வைக்கப்பட்டிருந்ததாகவும் மூத்தவர்கள் கூறுகின்றார்கள். இன்று "நாய் கடிக்கும் கவனம்" என்ற வாசகங்களைத் தாங்கி நிற்கும் எம்மவர்களின் வாசற் படலைகளுடன் ஒப்பிடும்போது அன்றைய நாளின் சங்கடன்படலைகள் எங்கள் இனத்தின் வரலாற்றுத் தனித்துவத்தையும் அதிலிருந்து நாம் பிறழ்ந்து வந்த பாதையையும் காட்டும் சுவடுகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது.


## துலா



ஆரம்ப காலத்தில் நீர்ப்பாய்ச்சல் தொடங்கிய காலம் கிணறுகளிலிருந்து நீரை வெளியே பாய்ச்சுவதற்கு துலாவும் பட்டையும் பாவிக்கப்பட்டது. கிணற்றின் ஒரு பக்கத்தில் ஆடுகால் மரங்கள் நாட்டப்பட்டு அவைகள் தாங்கி நிற்கக்கூடியதாக பனை, தென்னை மரங்களில் நீளமான துலாக்கள் தயாரித்து அதன் சமநிலைக்கேற்ப அச்சுலக்கை போட்டு துாவில் ஏறி இறங்குவதற்காக இடையிடையே நென்புகளும் போட்டு இந்த துலா இறைப்பைச் செயற்படுத்துவார்கள். நீரைக் கோலி எடுத்துவருவதற்குப் பட்டைகள் (வாளிக்குப் பதிலாக) பாவிக்கப்படும். பனை ஈர்க்குகளால் நுட்பமாகத் தயாரிக்கப்பட்ட துலாக் கொடியுடன் பட்டையில் கட்டப்படும் பட்டைக் கொடியையும் முறையாகப் பிணைப் பதன் மூலம் பட்டை நீரோடு வெளியே வரும்போது சுழராது பாதுகாக்கும். பட்டையைச் சமநிலையில் வைப்பதற்கு பட்டைக்கல் பாவிக்கப்படும்.


கிணற்றின் ஆழத்தைக் கணித்து அதற் கேற்ற விதத்தில் துலாவின் நீளம் தீர்மானிக் கப்படும். நீளமான துலாவிற்கு இரண்டு பேரும் மற்றையதற்கு ஒருவரும் துலா மிதிப்பாளர்களாகக் கடமை புரிவார்கள். இறைத்து முடிந்தவுடன் பட்டையை உலர வைப்பதும் துலாக் கொடியைச் சுற்றிப் பாதுகாப்பாக வைப்பதும் இறைப்புச் செயற்பாட்டில் முக்கியப்படுத்தப்படுகிறது.

## சுமை தாங்கி




மூடைகளைத் தூக்கி அடுக்கி இடத்துக்கிடம் மாற்றிக் களஞ்சியப்படுத்துல், விற்பனை செய்தல் போன்ற சகல நடவடிக்கைகளுக்கும் இயந்திரங்களையே பாவிக்கும் இக் காலத்தைப் போலல்லாது ஆரம்ப காலத்தில் மக்கள் பொருட்களைத் தலைகளிலும் தோள்களிலும் சுமந்து செல்வதே நடைமுறையாகும். முன்னைய காலங்களில் இவ்விதம் சுமந்து செல்லும் சுமைகளை வழியில் இறக்கி வைத்து களைப்பாறிச் செல்வதற்கு ஊரில் குறிப்பிட்ட தூர இடைவெளியில் சுமைகளைத் தலையிலிருந்து இறக்க வசதியான உயரத்தில் சுமைதாங்கிகள் கட்டப்பட்டிருந்தன. பக்கத்தில் இளைப்பாறுவதற்கு வசதியான மண்டபங்கள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் சில தற்போதும் சில இடங்களில் அடையாளம் காணக்கூடிய வகையில் உள்ளன. பிரசவ நேரங்களின்போது மரணமான தாய்மார்களின் நினைவாகவே சில சுமைதாங்கிகள் அமைக்கப்பட்டதாகவும் கிராமத்திலுள்ள மூத்தவர்கள் கூறுகின்றார்கள். இன்று முறையான பராமரிப்பின்றி இவை அழிவடையும் நிலையில் உள்ளமை கவலைக்குரிய விடயமாகும்.

## சூத்திரவாளி



துலா மூலமான நீர்ப்பாய்ச்சலின் பின் சூத்திரவாளி முறை கையாளப்பட்டது. கிணற்றின் நடுவே பெரிய தீராந்தியில் பல பல்லுப்போட்ட சக்கரம் ஒன்று பொருத் தப்பட்டு அதில் நெம்புகோல் பொருத்தப்பட்டிருக்கும். பல்லுப்போட்ட சக்கரத்திலிருந்து கிணற்றின் ஆழப் பகுதிக்கு சங்கிலியில் வாளிகள் பொருத்தப்பட்டிருக்கும். நெம்புகோலில் நுகம் வைத்து இரண்டு மாடுகளை இட்டுச் சுற்றும்போது சங்கிலியில் பொருத்தப்பட்ட தொடரான வாளிகள் கீழ்ச்சென்று நீரை நிரப்பி மேலே கொண்டுவந்து பாய்ச்சும். இதிலும் மூன்று வகை உண்டு. பல வாளிகளைக் கொண்டதும் மாடுகள் கிணற்றைச் சுற்றிவருவது ஒரு வகை. இரண்டு வாளிகளைக் கொண்டு முன்னையதைப் போலச் சுற்றிவருவது. மூன்றாவது மாடுகள் முன் சென்று பின் வருவது. இந்தவகைச் சூத்திரத்திற்கு மாடுகள் சென்றுவரும் இடம் கிணற்றுக்கு அப்பால் தனி இடம்.

## "ஆ" உரஞ்சிக் கல்



முந்திய காலங்களில் விவசாயிகள் தமது தோட்டத் தேவைகளிற்கு மாடுகள் வளர்க்கும் போது அவை களை வீடுகளில் கட்டிவைத்து தீனி போடுவது அவர்களுக்குக் கடினமானதோடு மாடுகளுக்கும் நிறைவு ஏற்படாது. மாடுகள் காலாற நடந்து மேய்ந்து வருவதே அவற்றிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். இவ்விதம் மேய்க்கப்படும் மாடுகள் மதியவேளையில் நீர் அருந்துவதற்காக வீதியோரங்களில் உள்ள குளங்கள், நீர் தேங்கும் வாய்க்கால் ஆகியவற்றிக்கு கொண்டுசெல்லப்படும்.

நீர் அருந்திய பின் மாடுகள் தமது உடம்பை ஏதாவது ஒன்றுடன் தேய்த்துத் தம்மை ஆசுவாசப் படுத்தும். இந்த இயல்பு தெரிந்து ஊரில் குறிப்பிட்ட இடங்களில் நன்கு பொழியப்பட்ட தேவைக்கேற்ற உயரமான கற்களை நாட்டி வைப்பது ஊராரின் அக்கால வழமையாக இருந்தது. மாடுகள் (ஆ) தமது உடம்பை உரஞ்சுவதற்குப் பாவிப்பதால் இவை ஆ உரஞ்சிக் கற்கள் என அழைக்கப்பட்டன.

## வெங்காயக்கூடு



வெங்காயத்தைக் கூடைகளில் இட்டு அனுப்பும் முறை கண்டுபிடித்ததால் வெங்காயக் கூடு பின்னும் கைத்தொழிலும் கிராமங்கள் தோறும் முன்னேற்றமடைந்தது. ஓய்வுநேரமுள்ள பெண்களும் சிறுவர்களும் இந்தக் கைத்தொழில் மூலம் பணம் சேர்க்கக்கூடிய வழியும் பிறந்தது. பனை மரங்களை வளர்த்தோருக்கும் ஓலை வியாபாரம் அவர்களின் பொருளாதாரத்தில் முன்னேற்றத்தை உண்டாக்கியது. இந்தியாவில் வெங்காயத்தை எவ்வாறு சேமிக்கிறார்கள் என்பதைக் கண்டறியச் சென்ற குழுவினர் செய்த சிபார்சின் பிரகாரம் வெங்காயத்தை அறுவடை செய்த நிலத்திலேயே உலரவிட்டுப் பத்துப் பதினைந்து அல்லது இருபது கிலோ நிறையுள்ள பிடிகளாகக் கட்டி அவற்றை வெயிலும் மழையுந்தாக்காத வெளிச்சமும் காற்றோட்டமும் இருக்கக்கூடிய கொட்டில் களில் அதற்கெனப் பரப்பப்பட்ட மரங்களிற் கட்டிச் சேமித்து வைத்து அந்த வெங்காயத்தை ஏறத்தாழ ஓர் ஆண்டு வரை அழுகல் நோய் தாக்காமற் பாதுகாக்கக் கூடியதாக இருந்தது. இதனால் வெங்காயத்தை அறுவடை செய்த உடனேயே சந்தைப்படுத்தவேண்டிய தேவை இல்லாமற் போயிற்று. இதனால் வெங்காயக் கூடு பின்னுங் கைத் தொழிலும் நின்று போயிற்று.

நன்றி :

**வேரூன்றி விழுதுபரப்பும் ஆலமரம்**

*(அளவெட்டி மகாஜனசபை வெளியீடு)*

**ஆயிரம் எதிரிகளைவிட ஒரு போலி நண்பனால் அதிகம் தீமை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாணவன் இங்கிலாந்தில் சாதனை



யாழ்ப்பாணம் – சாவகச்சேரியைச் சேர்ந்த டாக்டர் சிதம்பரநாதன் சபேசன் இங்கிலாந்தில் a groung breaking radio teal time tagging system என்ற கண்டுபிடிப்பை நிகழ்த்தி சாதனை படைத்துள்ளார்.

இச்சாதனைக்காக அவருக்கு UK Pioneer (கண்டுபிடிப்பாளர்) மற்றும் royal academic entrepreneur ship கண்டுபிடிப்பை வர்த்தக ரீதியாக அறிமுகப்படுத்துபவர் ஆகிய உயரிய விருதுகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர் தனது இடைநிலைக் கல்வியை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் பயின்று 2000ஆம் ஆண்டு க.பொ.த. சாதாரண தரத்தில் 9A, b சித்தியையும் உயர்தரக் கல்வியை யாழ். இந்துக் கல்லூரியிலும் கற்று 3 ஏ சித்தியையும் பெற்றார்.

தொடர்ந்து மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்துக்குத் தெரிவு செய்யப்பட்டு அங்கு சில மாதங்கள் கல்வி பயின்றார். இந்நிலையில் இங்கிலாந்தில் புகழ்பெற்ற பல்கலைக்கழகங்களில் ஒன்றான Sheffied பல்கலைக்கழகத்தில் புலமைப் பரிசில் பெற்று தனது இளநிலை பொறியியற் கல்வியை (B.Eng Electronic Engg) 2007ஆம் ஆண்டு பூர்த்தி செய்து இங்கிலாந்து ரீதியான தெரிவான 18 முதல் மாணவர்களில் ஒருவராகத் திகழ்ந்தார். இந்தச் சாதனைக்காக இவருக்கு Sir William Siemen Medal பதக்கம் வழங்கப்பட்டது.

தொடர்ந்து தனது முதுமாணிக் கல்வியை உலகளாவிய ரீதியில் திறமை வாய்ந்த இங்கிலாந்து Cambridge பல்கலைக்கழகத்தில் புலமைப்பரிசில் பெற்று தொடர்ந்தார். இங்கு முதலில் Master of Philosophy in Electronic Engg மற்றும் Doctor of Phlosophy in Electronics Engg என்ற உயரிய பட்டங்களையும் பெற்றுக் கொண்டார்.

பல விருதுகளையும் பரிசுகளையும் பெற்ற இவரது ஆராய்ச்சிக் கண்டுபிடிப்புகள் இங்கிலாந்து பத்திரிகைகளிலும் பல்வேறு ஆங்கில இணையத் தளங்களிலும் வெளியிடப்பட்டுள்ளன. அத்துடன் இரண்டு Patenis inventer என்ற பட்டங்களையும் பெற்றார்.

இவர் தற்போது கேம்பிறிச் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகள் கிரிக்கெட் கழக தலைவராகவும் கேம்பிறிச் பல்கலைக்கழகத்தின் பொறியியற் தொழிநுட்ப இளைய வல்லுனர் அமைப்பின் தலைவராகவும் செயற்பட்டு வருகிறார்.

இவரது கண்டுபிடிப்பான radio real time getting system ஆனது பல வர்த்தக ஸ்தாபனங்களுக்கும் எயர் லைன்ஸ் நிறுவனங்களுக்கும் கோடிக்கணக்கான வருமானங்களை ஈட்டக்கூடிய வாய்ப்பினை உருவாக்கியுள்ளது.

இவரது கண்டுபிடிப்பான intellgent wireless passive sensor teachnology system விமான நிலையத்தில் பயணிகளையும் பயணிகளின் உடைமைகளையும் தெளிவாக இனங்காட்டக்கூடியது.

இவரது கண்டுபிடிப்பு விமான நிலையங்களில் பாதுகாப்பு சேவைக்கு பெரும் வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

# உலகின் மிகப்பெரிய குடும்பஸ்தன் : ஜியானோ சானா

## 39 மனைவிகள்; 94 குழந்தைகள்; 100 அறைகள் கொண்ட ஒரு மாளிகை



ஒரு வேளை உணவுக்காக அரிசி மட்டும் 220 இறாத்தல் தேவை!





உலகின் மிகப்பெரிய "குடும்பஸ்தன்" ஜியோனா சானா 39 மனைவிகள்; 94 குழந்தைகள். விலைவாசி விண்ணை முட்டும் இந்தக் காலகட்டத்தில் ஒரு மனைவி; இரண்டு குழந்தைகளை வைத்து குடும்பம் நடத்துவது என்பதே இமாலய சாதனை. ஆனால் அந்தக் காலத்தில் மன்னர்களும் பிரபுக்களும் ஏராளமான மனைவிகளைக் கொண்டிருந்தனர். இராமாயணத்தில் தசரத சக்கரவர்த்தி 60ஆயிரம் மனைவியருடன் வாழ்ந்தார் என்று கூறப்பட்டுள்ளது. நாடு சுதந்திரமடைந்ததிலிருந்து ஒருவனுக்கு ஒருத்தி என்பது சட்டமாக்கப்பட்டது. குறிப்பிட்ட சில சமூகங்களைத் தவிர்த்து இச்சட்டம் கடுமையாக பின்பற்றப்படுகிறது. வடகிழக்கு மாநிலமான மிசோரமைச் சேர்ந்த ஜியானோ சானா என்பவர் 39 மனைவிகளுடன் வாழ்ந்து உலகின் மிகப்பெரிய குடும்பத்தைக் கொண்டவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். 39 மனைவிகள் மூலம் 94 குழந்தைகளைப் பெற்றுள்ளார். தற்போது இவர் வீட்டில் 14 மருமகள்களும் 33 பேரக்குழந்தைகளும் உள்ளனர். தனது பெரிய குடும்பத்தைப் பராமரிப்பதற்காக தனது சொந்தக் கிராமத்தில் 100 அறைகள் கொண்ட ஒரு மாளிகையை அவர் கட்டினார்.

இந்நிலையில் தனது குடும்பத்தினரின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கவேண்டும் என்று விரும்பிய ஜியானோ சானா தனது அடுத்த திருமணத்திற்காக பெண் பார்க்கும் படலத்தைத் தொடங்கியுள்ளார். தன்னைச் சுற்றிவரும் பல பெண்களில் இருந்து ஒருவரை அவர் தேர்ந்தெடுக்க உள்ளதாக குடும்பத்தினர் கூறுகின்றனர்.

தற்போது 67 வயதான ஜியானோ சானா உள்ளூர் பெண்களைத் தவிர்த்து அமெரிக்கா சென்று அங்கு ஒரு பெண்ணைப் பார்த்து மணம் செய்து கொள்ளலாமென்று திட்டமிட்டுள்ளார். திருமணத்தில் அதிக நாட்டங்கொண்ட ஜியானோ சானா தனது மனைவிகளுக்கு அறைகளை ஒதுக்குவதில் கவனமாக இருக்கிறார். இளம் மனைவிகளை தனது பிரத்தியேக படுக்கையறைக்குப் பக்கத்தில் உள்ள அறைகளிலும் வயதான மனைவிகளை தனது மாளிகையின் ஒதுக்குப் புறங்களில் அமைக்கப்பட்டுள்ள மற்ற அறைகளிலும் தங்க வைத்துள்ளார். "நான் கடவுளின் சிறப்புக் குழந்தை. அதனால்தான் என்னைக் கவனித்துக் கொள்வதற்காக ஏராளமான சொந்தங்களை எனக்குக் கொடுத்துள்ளார். நான் 39 மனைவிகளின் கணவன் என்பதை நினைத்து பெருமைப்படுகின்றேன். இந்த வகையில் நான் அதிஷ்டக்காரன்" என்று கூறியுள்ளார். காதல் மன்னன் ஜியானோ சானா. இவரை கடைசியாகத் திருமணம் செய்துள்ள ரிங் மினி என்ற 35 வயது கொண்ட மனைவி கூறியதாவது – இந்தக் கிராமத்திலேயே இவர் தான் பார்ப்பதற்கு அழகான தோற்றம் கொண்டவராம். நம்பமுடியவில்லை! அவளா சொன்னாள்.




Jasmin Silk House ஜஸ்மின் சில்க் ஹவுஸ்

Jasmin Silk House
Fester Str.50,
40882 Ratingen,
Germany.

மாணவர் கல்வி சிறக்க வாழ்த்துகிறோம்.

புதிய டிசைன்களில் இமிடேஷன் நகைகள், புதிய டிசைன் காப்புக்கள் எம்மிடம் கிடைக்கும்.

மலிவும், தரமும், ஒன்றாய்க் குலாவிடும்.

T.P. 02102-844744




உன்னிடம் வம்பளப்பவன் உன்னைப்பற்றியும் வம்பளப்பான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# To be Confident




**Ms. A. Shrimathy**
Teacher
CP/N/Kotagala Tamil Maha Vidyalayam
Kotagala.

1. **You know how to defend yourself**
If you know you can handle yourself. You will walk with an air of confident. Don't go looking for trouble : always run rather than fight. Let them take your bag, even if it is full of money. Never take risks with your safety.
2. **Regular exercise is easy to organise.**
You don't have to be super-fit to benefit from exercise. Having to commit to a regular class particularly if you go with a friend, reaps huge physical and psychological rewards. As soon as you start, you feel better, look better and your confident in yourself and your appearance will soar.
3. **Your birthday is a goodtime to take stock.**
Look back over the year and you will be surprised at how much you have done and what you have achieved. You are not only older but also wiser.
4. **You are special**
Everyone is different and special in their own way. Be gentle with yourself, focus on your good points, and you will present a confident face to the world.
5. **Your diary is a mine of useful information**
Write down not only appointments, but also jobs to do. Such as bills to pay, when to go beauty parlour and so on. Then you can be confident that you will not miss anything, and your mind will be free to think about other things.
6. **Involve in Gardening**
Whether you grow something from seed, it wonders of the natural world will lift your spirits and workings of mother nature will never cease to amaze you.
7. **Meditation makes happiness.**
Meditation is simply one way to clear your mind. Taking a few minutes each day to sit in quiet contemplation will leave you refreshed and better able to face the challenges that are waiting for you.
8. **Taken food with a pinch of salt.**
You have a balanced diet, which plenty of fresh fruit and vegetables and don't take over in anything, you can be confident you are treating your body well.
9. **You keep your professional skills up-to-date.**
You, yourself and you employer to keep up with the times. The skills required for many jobs need regular upgrading.
10. **Your success is documented.**
Your old photographs, certificates, complimentary assessments, exam results and so on that remind you of your achievements.
11. **For every problem there is a solution.**
Adopt attitude and you will be confident that you can cope with everything.
12. **Break the ice first.**
If you enter a room and don't know anyone, seek out someone else who looks unsure and go and say hello. Most people find it difficult to break the ice.
13. **You able to live with yourself.**
Set your own rules and beliefs and try to live within them, whichever path you follow in life. The values of others shouldn't influence you.
14. **Respect yourself.**
No one can make you feel inferior without your consent. Respect yourself and others will respect you.
15. **Practice makes perfect.**
If at first you don't succeed, don't give up. Try again, perhaps approaching the problem from a slightly different angle, and eventually you will win through.
16. **You Send out good vibrations**
Think good, confident thoughts and you will engender similar feelings in those around you, inspiring confidence wherever you go.
17. **Deep breathing**
Too many of us breathe too shallowly. Learn to breathe slowly and deeply, too work with your breath not against it. You will feel ready for anything.
18. **You can control your own denting.**
Make your own decisions, stick to them and take responsibility for the outcome. You can't blame others when things go wrong.
19. **You are an interesting person.**
If you show an interest in others, then you become interesting yourself.
20. **You can learn to handle rejection.**
Look on it not as a bad reflection of you but a revelation of a fault in others. If you are honest and open with people and they reject you, that's their problem, not yours.
21. **You can learn by your mistakes**
Analyze what went wrong and why Then when the same situation arises again, you will be more confident about tackling the problem and coming up trumps.
22. **You do things together as a family.**
Teenagers, especially boys, benefit from doing things as a family. Even something as simple as sharing a meal around a table encourages a feeling of togetherness that gives young people self-confidence and feeling of security.
23. **It might never happen.**
Of course bad things will happen in everyone's life, but don't spend all your time looking for them and planning what you will do when they arrive. Focus on the good. Don't spend money saving up for a sore finger.
24. **You believe in the power of prayer.**
Whichever god you worship, taking time out to contemplate and put your problems in the hands of another can bring everything into focus and help you to endure.
25. **If you thing you can, you can.**
Start any task from a confident footing and your chances of success are greatly enhanced.
26. **A little patience goes a long way.**
Don't expect everything to come to your straight away. The best things are often those that we have to wait for.
27. **It's never too late.**
Take time out to review your plans and how much you have achieved. You might find you need to change your goals or to modify your approach to get what you're after.
28. **Contributing is greater**
If you take an active interest in public affairs, local or global, you will soon see that the 'little people' can make a difference.
29. **You take care of your health.**
If you know your body and can spot the early warning sings of illness, you will reduce your risk of serious complaints and be more likely to recover quickly. Prevention is better that cure.
30. **A new job will revive your skills and enthusiasm.**
If your job is unfulfilling, you will feel under-valued and your confidence will falter. Work for promotion, retrain, change company do what you can to get into a position where you are valued by others and by yourself.

## வலியம் (Vallium) (ஒரு மருந்து குளிகை)

மலிவான விலையில்
வலம் வருகிறது போலும்
'வலியம்' எனும் மருந்து குளிகை
மனம் உளம் பாதிப்புற்றோர்க்கு
'மனம்' செயற்கை நித்திரையூடாக
அமைதியடைவதற்கா,
நிம்மதியையே குலைக்கும் குளிசை,
'வலியத்தை' வலியவே
நோயாளிக்கு நேரத்துக்கு நேரம்.
வலியம் இயற்கை நித்திரையை தராது
வலியுடன் கூடிய செயற்கைதான்!
விழிப்பு நிலையில் மனமும் உடலும்
அழிப்புபோல பாதிப்புறும்.
இயன்றளவு வாழ்க்கை பாதிப்புடன்
மீண்டும் செயற்கை நித்திரைக்கு
தூண்டிவிடும் 'வலியம்'
வலியவே வலியம் வயிற்றுக்குள்
நாளும் செயற்கை நித்திரை
பாடும் வலியத்தின் வலிமையால்
நீளும் செயற்கை நித்திரை
இரவு இருண்ட வாழ்வாக,
பகல் சுருண்ட வாழ்வாக,
நிம்மதி சுகம் தொலைந்த வாழ்வாக,
மதியிழந்த மனிதராக,
பலியாகிவிடுகிறார்கள் வலியத்தால்!
காலப்போக்கில் வலியத்தின் தன்மை
'ஆலம்' என அறிந்து உணர்ந்து
ஞாலம் முழுவதும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது.
பலன் உலக வைத்தியர்கள் மகாநாடு.
பல ஆராய்ச்சிகளின் பலனாக
'வலியம்' தடை செய்யப்பட்டுவிட்டது.
பாவனைக்கு தடை என தகவல்.
எனினும் சில நாடுகளிலும்
'வலியம்' வலம் வந்து தனது
வலிமையால் சாதாரண
நோயாளிகளை பலியாக்கும்
நிலைமையை எண்ணினால்
குலைநடுங்கும், வலியத்தை
எவரும் நினைத்தால்
எனவே மறைமுக துன்பம் இதை
வலியவே ஒழித்துப்போட வேண்டும்!
பாவனைக்கு தடை செய்த
வேதனை தரும் 'வலியத்தை'
சோதனை செய்யாவிட்டாலும்
ஒழித்துவிடுவதே அறிவுடமை!
வலியத்தை பாவனைக்கு விட்டாலும் துன்பம்,
விடாவிட்டாலும் துன்பம்.
எனவே வலியத்தால் எவரும்
நலிந்து பலியாகக் கூடாது.
வலியத்தை தொடாவிட்டால்
துன்பம் இல்லை.
அதுவே ஆரோக்கியத்தின் இன்பம்!
மன, உள, உடலுக்கு ஆரோக்கியமும்
மகிழ்ச்சியும் உண்மை 'அன்பு'மே உன்னத மருந்து!
மருந்தை நாடாதீர், விருந்து தேடாதீர்
அருந்துங்கள் தூயநீர், விருந்து தேடாதீர்,
அருந்துங்கள் தூயநீர், அரும்பெரும்
இயற்கை மூலிகைகள் தரும் ஆரோக்கியமும்
சுகமும் வயிற்றுக்குள் செல்லவேண்டியது
இயற்கை உணவுகளே! செயற்கை மருந்து அல்ல!
நோயற்ற வாழ்வே, நிறைவு தரும் அர்த்தம்!

**சி. சிவசுகிர்தமலர்**
*ஓய்வுபெற்ற ஆசிரியை*
*ஆனைப்பந்தி.*



**S.K.Silks Paradise**
டோட்முண்ட் நகரில் மாபெரும் ராஜ முத்திரை
Germany
கல்யாண கூறைச் சேலைகள் பட்டுச் சேலைகள்,
காக்ராச்சோலி சீக்குயின்ஸ்
சேலைகள், அனார்க்கலி பஞ்சாமி
ஒரு சேலை 60 யூரோவிற்கு மேல் வாங்கினால் பிளவுஸ் இலவசமாகத் தைத்துத் தரப்படும்.
T.P. 0231-9501648

உண்மையும் உழைப்பும் சேரும்போது வெற்றிகள் வாசல் கதவைத் தட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சாதனை வீரன் ஆழிக்குமரன் ஆனந்தன்

25ஆம் திகதி மே மாதம் உலக சாதனை வீரன் ஆனந்தனுடைய 68ஆவது பிறந்த தினம். ஈழத் திருநாட்டுக்கு சர்வதேச அரங்கில் மாபெரும் புகழையும், பெருமையும் தேடித்தந்த வீர மகா புருஷன் செல்வகுமார் ஆனந்தன் ஏழு உலக சாதனைகளை நிலைநாட்டி உலக சாதனைகளைக் குறிக்கும் கின்னஸ் புத்தகத்தில் இடம்பெற்றார்.

இலங்கையின் புகழ்பெற்ற பேராதனை பல்கலைக்கழகத்தில் 17 வயது மாணவனாக 1961ஆம் ஆண்டில் நுழைந்து சட்டக் கல்வி பயின்றார். பல்கலைக்கழக மாணவனாக இருந்தபொழுது இலங்கையையும், இந்தியாவையும் பிரிக்கும் பாக்குநீரிணையை அங்கும், இங்குமாக ஒரே முறையில் நீந்திக் கடந்தார். பின்பு பாக்குநீரிணையை அங்கும், இங்குமாக ஒரே முறையில் நீந்திக் கடந்து உலக சாதனையை நிலைநாட்டினார். தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடியில் இருந்து தலைமன்னாருக்கும் நீந்திய சாதனைதான் இது.



சட்டத்தரணியாக காலஞ்சென்ற பிரதம நீதியரசர் சர்வானந்தாவுடன் அவருடைய ஜூனியராகப் பணியாற்றினார். சட்டத்தரணியாக வழக்கு மன்றங்களுக்குச் செல்வதைவிட பல சாதனைகளை நிலைநாட்டி தமிழ் இனதுக்கும், பிறந்த இலங்கை மண்ணுக்கும் பெருமை தேடித்தரவேண்டும் என்பதே அவருடைய ஒரே அவாவாக இருந்தது.

தலைநகர் கொழும்பில் 1979ஆம் ஆண்டில் 187 மணிநேரம் இடைவிடாது 1487 மைல்கள் சைக்கிள் ஓட்டி உலக சாதனை படைத்து வெற்றி வீரனாகினார்.

இதே 1979ஆம் ஆண்டில் கொழும்பில் 136 மணிநேரம் தொடர்ச்சியாக போல் பஞ்சிங் "Ball Punching" செய்து உலக சாதனை புரிந்தார்.

1980ஆம் ஆண்டில் 33 மணிநேரம் ஒற்றைக் காலில் அசையாமல் நின்று உலக சாதனை படைத்தார்.

இரு நிமிடங்களில் 165 தடவைகள் இருந்து எழும்பி மற்றொரு சாதனை படைத்தார்.

"High Kicks" என்ற மற்றும் ஒரு உலக சாதனையை 1980 டிசம்பரில் 9100 தடவைகள் செய்து பெருமை தேடித்தந்தார்.

இலங்கைக்கு வெளியே உலக சாதனை செய்ய வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. இந்திய தமிழ் நாட்டில் சென்னை அண்ணா நீச்சல் தடாகத்தில் தொடர்ச்சியாக 80 மணிநேரம் தவளையைப்போல் வாழ்ந்து (Treading in water) தமிழக மண்ணில் 1981ஆம் ஆண்டு ஜூலை மாதம் உலக சாதனையால் ஒரு வரலாற்றைப் படைத்தார்.

அவரது ஏழு சாதனைகள் கின்னஸ் புத்தகத்தில இடம்பெற்றுள்ளன. அவரது அவா தான் 25 உலக சாதனைகளைப் படைத்து உலகத்தில் ஒரே ஒரு தமிழ் மகன் இவ்வளவு சாதனைகளைப் படைத்துள்ளான் என்று வரலாற்றில் பதியப்படவேண்டும் என்று விரும்பினார். கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறாவிட்டாலும் 1978இல் கொழும்பில் டுவிஸ்ட் நடனம் 128 மணிநேரம் இடைவிடாது ஆடி இலங்கை மக்களின் இலட்சக்கணக்கான இதயங்களில் இடம்பெற்றார். பின்பு 70 இறாத்தல் எடையுள்ள இரும்பை இடைவிடாது 2000 தடவைகள் கீழேயிருந்து மேலே தூக்கி பெருமை சேர்த்தார்.

மீண்டும் தமிழக மண்ணில் சென்னை வீதிகளில் 149 மணிநேரம் தொடர்ச்சியாக நடந்து தமிழக மக்களின் இதயங்களில் ஒரு ஹீரோவாக இடம் பிடித்தார்.

யாழ்ப்பாண மண்ணிலே ஒரு சாதனை நிலைநாட்ட விரும்பி 1983ஆம் ஆண்டு 22 அவுன்ஸ் பிலியட் பொல்லை 2520 தடவைகள் உயர்த்தி ஒரு சாதனையை நிறுவினார்.

மீண்டும் ஒற்றைக்காலில் 130 இறாத்தல் இரும்பை தோளில் சுமந்துகொண்டு நிற்கும் ஒரு சாதனை படைத்தார்.

அச்சம் என்பது மடமையடா, அஞ்சாமை திராவிடர் உடமையடா, ஆறிவும் சாவு, நூறிவும் சாவு என்பதுதான் அவரது தாரக மந்திரம். எந்த சாதனை படைப்பதற்கும் அவர் தயங்குவதே இல்லை.

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் இலட்சிய மகன்தான் ஆனந்தன். பாரதி பாடிய உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பதில்லையே என்ற பாரதியின் கனவுக் கண்ணன்தான் ஆனந்தன். அவரது குணாதிசயமே நட்புக்கு இலக்கணமாகவும் மனிதாபிமானத்துக்கு இலக்கியமாகவும் வாழ்வதுதான். தாய்த்திருநாட்டுககும், தமிழ் வாழும் நல் உலகிற்கும் தன் உலக சாதனைகளால் அழியாப்புகழீட்டினார். ஆனந்தன் சர்வகலாசாலையில் ஒரு பிரபல சோஷலிஸவாதியாக வாழ்ந்தார். மனிதனை மனிதன் சுரண்டும் ஒரு சமூக அமைப்பை அறவே வெறுத்து தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்கும், தமிழ் முஸ்லிம் சிங்கள ஒற்றுமைக்கும் ஒரு தேசிய பாலத்தை கட்டமைக்க கனவு கண்டார். இவரை நிச்சயம் அரசு ஒரு தேசிய வீரனாக பிரகடனப்படுத்தி தனக்குப் பெருமை சேர்த்திருக்க வேண்டும்.

பேராதனை பல்கலைக்கழகத்தில் 1961–1964இல் சட்டக்க்வி பயிலும்போது முழு பேராதனை வளாகத்திலும் ஒரு பெரிய ஹீரோவாக, கதாநாயகனாக விளங்கினார். ஆனந்தன் என்ற சாதனை வீரனை மனித நேயத்துக்கு இலக்கணமானவரை, துணிச்சலுக்குப் பெயர் பெற்றவரை மூன்று மொழிகளிலும் பாண்டித்தியம் பெற்றவரை, விளையாட்டு வீரனை, ஆடல் அழகனை, பாடுவதில் வல்லவனை, விவாத அரங்குகளில் எதிர்ப்பக்கத்தில் உள்ளவர்களை பந்தாடுபவரை, எல்லோருக்கும் உதவ வேண்டும் என்ற இரக்க சிந்தனை கொண்டவரை, நட்புக்கு இமயமானவரை, பேராதனை பல்கலைக்கழக


## 25 உலக சாதனைகள் படைத்த உலகின் ஒரேயொரு தமிழ் மகன்

மாணவர்கள், பேராசிரியர்கள், ஊழியர்கள், பல்துறைகளையும் சார்ந்த அனைத்து பல்கலைக்கழக சமுதாயமே அறிந்திருந்தது, மகிழ்ந்திருந்தது, போற்றியது. தமிழன் தொன்மையிலும், இனிமையிலும் அதன் பெருமையிலும் தன்னைத் திளைக்க வைத்தார்.

பாரதி தன் கண்ணனைப்பாடிய எங்கிருந்தோ வந்தான் இடைச்சாதி நான் என்றான் இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்து விட்டேன். நண்பனாய், மந்திரியாய், நல்லாசிரியனுமாய், பண்பிலே தெய்வமாயம், பார்வயிலே சேவகனாய் இங்கிவனை நான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன் என்று கூறிய பாடல் ஆனந்தனைக் குறிக்கிறது.

பல பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஆனந்தன் ஒரு முன்மாதிரியாகத் திகழ்ந்தான். அவரது பழக்க வழக்கங்கள் மிகப் புனிதமானது. மதுவைத் தொட்டதில்லை, புகை பிடிப்பதில்லை, பொறாமை என்ற சொல் ஒரு புள்ளி அளவுக்குக்கூட இருந்ததில்லை. பெண்களைச் சகோதரிகளாக, தாயாக மதித்தார்.

ஆனந்தனைப் போலவே அவரது மூதாதையர்களும், பெற்றோரும், உடன்பிறப்புகளும் தங்கள் வாழ்க்கையிலே பேரும் புகழும் பெற்று விளங்கினார்கள். தகப்பன் விவேகானந்தன் நீர்ப்பாசன பொறியியலாளர். சிவாஜி கணேசன் நடித்த பிரெஸ்டீஜ் பத்மநாதன் போல் கம்பீரமாக இருப்பார். தாய் இராஜரத்தினம் அம்மாள் தென்னிந்திய பக்தி நிறைந்த அழகான பெண்மணியாகக் காட்சியளிப்பார். உடன் பிறப்புக்கள் அனைவருமே தங்கள் துறைகளில் பிரகாசிக்கின்றார்கள்.



முக்கியமாக தங்கை ரங்கமணி என்ற ரங்கா நடனத் துறையில், குச்சுப்பிடி நடனத்துறையில் பேரும் புகழும் பெற்று உலக நாட்யடிக் கலைஞராகத் திகழ்கிறார். அவர் அந்த நாட்டியத்தில் பாண்டித்தியம் பெற்றவர். ஒரு மிக உயர்ந்த நாட்டியக் கலைஞர். தமிழகத்தில் குச்சுப்பிடி நடனத்தை பெரும் யெர்பெற்ற வேம்படி சின்னசத்யத்திடம் பயின்று தமிழ்நாட்டில் அவரது முதல் மாணவியாகத் திகழ்ந்தார். தமிழ்நாட்டின் இன்றைய முதல்வர் ஜெயலலிதாவுக்கு குச்சுப்பிடி நாட்டியத்தை ரங்காதான் கற்றுக் கொடுத்தார். ஏழு வயதில் நடனத்துறைக்குத் தன்னை அர்ப்பணித்த ரங்கா தன் அண்ணன் ஆனந்தனைப் போல் ஒரு முழு நிலவாகப் பிரகாசிக்கிறார். ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவிடம் சிறப்பு விருதைப் பெற்ற கலைஞர் ரங்கா தற்போது ஆர்ஜென்டீனா நாட்டில் நடனக் கல்லூரி அமைத்து பல நாட்டியக் கலைஞர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார். அவரது கல்லூரி அந்த நாட்டில் பிரபல நாட்டியக் கல்லூரியாகவும் அவர் ஆர்ஜென்டினா நாடறிந்த நாட்டில் கலைஞராகவும் இன்று திகழ்கிறார்கள். குச்சுப்பிடி நாட்டியத்தைவிட பரத நாட்டியம், கதக்களி, மோகினி ஆட்டங்களிலும் அவர் சிறப்புப் பெற்று விளங்குகிறார்.

ஆனந்தனின் இரு பிள்ளைகளும் இன்று தங்கள் துறைகளில் மிகவும் பிரகாசிக்கின்றார்கள். பல ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் அவரது உடன்பிறப்புகள், சொந்த பந்தங்கள் சிறப்பாக வாழ்கின்றார்கள். ஆனந்தன் என்ற ஆலமரத்தின் நிழலிலே அவர்கள் விழுதுகளாக இருந்தார்கள். ஆனந்தனின் அம்மா, அப்பா, தம்பி, தங்கை, மச்சான், நண்பன் என்று கூறி புகழடைந்தார்கள், பெருமையடைந்தார்கள்.

சமுத்திரத்தில் புகழ்பெற்றிருந்த ஆனந்தன் அதே ரோன்ற சமுத்திரத்தில்தான் தன் வாழ்வு முடியப்போகின்றது என்று அறிந்திருந்தார். அவர் எனக்கு லண்டனில் இருந்து தினமும் கடிதம் எழுதுவார். இறுதியாக எழுதிய கடிதத்தில் ஆங்கிலக் கால்வாயை நீந்தி வெற்றிக்கொடி நாட்டுவேனா என்ற ஒரு எண்ணம் வாழ்க்கையில் முதன் முதலாக ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் ஒருபோதுமே நான் முன்வைத்த காலை பின்வைக்கவே மாட்டேன் என்று எழுதியிருந்தார். 1984ஆம் ஆண்டு ஆகஸ்ட் 6ஆம் திகதி தன் இளம் வயதில் 41வது வயதில் தமிழுக்கும் தமிழ் இனத்துக்கும், பிறந்த ஊர் வல்வெட்டித் துறைக்கும், பிறந்த நாடாம் இலங்கைக்கும், தன் இலட்சக்கணக்கான ரசிகர்களும், உயிர் நண்பர்கட்கும், உயிராக மதித்த தன் மனைவி மக்களுக்கும் மற்றும் உறவினர்களுக்கும் ஒரு இமயமாகத் திகழ்ந்த அந்த உன்னத மாவீரன் கடலுடன் கடலாகக் கலந்து உலகம் முழுவதும் உள்ள வானொலிகள் எல்லாம் ஆனந்தனின் சங்கமத்தை அறிவித்து எல்லோரின் கண்களையும் குளமாக்கின. ஆனால் இன்றும் அந்த உலக மாவீரன், உன்னத மனிதன் இலட்சக்கணக்கான மக்களின் மனங்களிலும் உறவினர்களின் மனங்களிலும் வாழ்கின்றான். அன்றும் இன்றும் என்றும் அவனை நேசித்த நேசிக்கும் நண்பனின் இதயத்திலே பொக்கிஷமாக வீற்றிருக்கின்றான்.

**முகமத் ஜமீல்**

கேட்டால் ஒழிய யோசனை கூறாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரியின் வரலாறு




யாழ் மாவட்டத்தில் கல்வி அபிவிருத்தியில் முன்னேற்றம் கண்டு வரும் பெண்கள் பாடசாலைகளில் யாழ் இந்து மகளிர் கல்லூரி குறிப்பிடத்தக்கது. **இக்கல்லூரி 1943ம் ஆண்டு யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பிக்கப்பட்டது.** இதன் ஆரம்ப அதிபராக யாழ் இந்துக்கல்லூரி அதிபரான திரு.A.குமாரசாமி அவர்களே இக் கல்லூரிக்கும் அதிபராக விளங்கினார்.

இக்கல்லூரி மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க கல்லூரி மைதானத்திற்கு அருகில் உள்ள பெரியார் திரு சிவகுருநாதர் பொன்னுச்சாமி அவர்களின் "பொன்னாலயம்" என்ற வீட்டில் இயங்க ஆரம்பித்தது. அன்றிலிருந்து காயத்திரி கணேசன் அதிபராக நியமிக்கப்பட்டார்.



மாணவிகளின் எண்ணிக்கை அதிகரிக்க 1945ம் ஆண்டு தார் மீக வள்ளலான **விசாலாட்சி சிவகுருநாதர்** தம்பதிகளால் வழங்கப்பட்ட 40 பரப்பு காணியில் தற்போதய இடத்திற்கு பாடசாலை இடம் மாறியது. அன்று கல்லூரி முகாமையாளரான சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்களால் கல்லூரி விஞ்ஞான ஆய்வுகூடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு கல்லூரி திறப்புவிழா நடைபெற்றது. மேலும் இந்துக் கல்லூரி சபையினால் காணி கொள்வனவு செய்யப்பட்டு கல்லூரி வளாகம் 114 பரப்பாக விஸ்தரிக்கப்பட்டது. 1943ம் ஆண்டு 8 ஆசிரியர்களுடனும் 110 மாணவர்களுடனும் 4ம் வகுப்பில் இருந்து 8ம் வகுப்புவரை கொண்ட பாடசாலையானது தற்போது 85 ஆசிரியர்களையும் 2063 மாணவர்களையும் கொண்டிருப்பதுடன் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையிலான இருமொழிமூல வகுப்புக்களைக் கொண்டு தனிச்சிறப்புடன் விளங்குகின்றது.


இந்துக்கல்லூரி அதிபரான திரு.A.குமாரசாமி அவர்களைத் தொடர்ந்து வந்த அதிபர்களான திருமதி.காயத்திரி கணேசன், செல்வி முத்து அச்சையா, திருமதி.கிளாரா மொட்வாணி, திருமதி.சரோஜினி ராவ், செல்வி.விமலா ஆறுமுகம், செல்வி.பத்மாவதி இராமநாதன், திருமதி.திவ்வியசிரோன் மணி நாகராஜா, திருமதி.சரஸ்வதி ஜெயராஜா ஆகிய அதிபர்கள் கல்லூரியை வளர்தெடுப்பதில் பெரும்பங்காற்றியுள்ளனர்.

2006 ஜனவரி மாதம் கல்லூரியைப் பொறுப்பேற்ற தற்போதய அதிபர் திருமதி.வேதநாயகி பேரின்பநாதன் கடந்த 5 வருடங்களிலும் கல்லூரியின் அபிவிருத்தியில் அற்பணிப்புடன் சேவையாற்றி வருகின்றார்.

கடந்த 2010ம் ஆண்டு க.பொ.த சாதாரண பரீட்சையில் 95% வீதமான மாணவர்கள் உயர்தர வகுப்பிற்கு தகுதி பெற்றுள்ளனர்.

2010ம் ஆண்டு க.பொ.த உயர்தர வகுப்பில் 63% வீதமான மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வதற்கு தகுதி பெற்றனர்.

இணைப்பாடவிதான பாடங்களிலும் மாணவர்கள் பல சாதனைகளைப் படைத்து வருகின்றனர். குறிப்பாக உள்ளக விளையாட்டுக்களிலும் மைதான பெரு விளையாட்டுக்களிலும் சாதனைகள் படைப்பதில் முன்னேறிச் சென்று கொண்டு இருக்கின்றார்கள்.




**2010ம் ஆண்டில் கல்லூரியின் சாதனைகள்**

பின்வரும் அணிகள் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றி சாதனைகள் படைத்துள்ளன.

| | |
|---|---|
| சதுரங்கப்போட்டி | 19 வயது அணி |
| | 15 வயது அணி |
| கரம் | 19 வயது அணி |
| | 15 வயது அணி |
| மேசைப் பந்து | 19 வயது அணி |
| பூப்பந்து | 19 வயது அணி |

19 வயதுப்பிரிவில் 100m ஓட்டத்திலும் முப்பாய்ச்சலிலும் 19 வயதுப்பிரிவில் 100m தடைதாண்டல் உயரம் பாய்தல் என்பவற்றிலும் தேசிய மட்ட போட்டிகளில் பங்குபற்றி முறையே செல்வி.ச.பானுஜா செல்வி.உ.சோபினி ஆகியோர் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

தமிழ்த்தினப் போட்டி 2010 இல் செல்வி.தி.வருணியா தனி இசைப்பிரிவு 3இல் மாகாணமட்டத்தில் 2ம் இடத்தினையும் குழு இசைப்பிரிவு 2இல் கல்லூரி மாணவிகள் பங்குபற்றி தேசியமட்டத்தில் 2ஆம் இடத்தினையும் பெற்று கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

மாகாணமட்டங்களில் நடாத்தப்பட்ட சர்வதேச அஞ்சல் தினம் சர்வதேச ஒலிம்பிக்விழா அகில இலங்கை சிறுவர் சித்திரப்போட்டி போதைப்பொருள் தடுப்பு ஆக்கத்திறன் போட்டி புற்றுநோய் கருத்தோவியப்போட்டி போன்ற போட்டிகளில் பங்குபற்றி கல்லூரி மாணவிகள் பெறுமதி மிக்க சான்றிதழ்களையும் பணப்பரிசில்களையும் பெற்று சித்திரத்தில் கல்லூரிக்கு பெருமை சேர்த்துள்ளனர்.

கல்லூரியின் மகுடவாசகமான "It ought to be beautiful I live here" என்பதற்கிணங்க தனது தூர நோக்கான கல்வி, படைப்பாற்றல், உடல், உள, ஆன்மீக மேம்பாட்டினூடாக எதிர்கால சவால்களை எதிர்கொள்ளத்தக்க ஆளுமை மிக்க மகளிரை உருவாக்கும் ஒரு உன்னத இடமாக கல்லூரி மிளிர்வதற்கான பணிக் கூற்றை முன்னெடுத்துச் செல்கின்றது.

வெளிநாடுகளில் உள்ள பழைய மாணவிகளினதும் கொழும்பு பழைய மாணவிகளினதும் பெற்றோரினதும் கல்வித்திணைக்களத்தினதும் அனுசரனையுடன் பௌதீக வளங்களை ஓரளவு பெற்றுவருகின்றது. கல்லூரி பழைய வகுப்பறை கட்டிடங்களைக் கொண்டிருந்தாலும் நவீன தொழில்நுட்ப உபகரணங்களின் உதவியுடன் தற்போது கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றது. மேலும் கணனியூடான வகுப்பறை கற்பித்தலை மேற்கொள்வதற்கான திட்டமிடலின் ஆரம்பச் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது. எல்லா வகுப்பறைகளுக்கும் விஸ்தரிக்கும் திட்டம் முழுமை பெற தொடர்ந்தும் முயற்சித்து வருவதைக் காணக்கூடியதாக உள்ளது.

☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☹☺☺☺☺☺☺



ஆசிரியர் குழாம்



கல்லூரியின் அதிபர்

**உண்மையும் உழைப்பும் சேரும்போது வெற்றிகள் வாசல் கதவைத் தட்டும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ANDRA ஆதரவில்

# கலை அரங்கம்

# தென்மராட்சி மீசாலையின் நாட்டியக்கலைஅரசி

ஸ்ரீமதி.சுபாதினி தயாபரன்







நாட்டியக்கலையரசி ஸ்ரீமதி.சுபாதினி தயாபரன் அவர்கள் 1989 இல் இருந்து "சுபாலயம்" எனும் நாட்டியப்பள்ளியை தென்மராட்சி மீசாலையில் நடாத்தி வருகின்றார். இவர் பல மாணவர்களைபரதகலாவித்தகர்களாகவும், 25ற்கு மேற்பட்ட மாணவர்களை B.F.A பட்டம் பெற்ற நடனஆசிரியர் களாகவும் வளர்த்துள்ளார். இவர் வருடாந்தம் " சுபாலயா" நாட்டியப்பள்ளியின் கலைவிழாவை சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

ஸ்ரீமதி சுபாதினி தயாபரன் அவர்கள் தென்மராட்சி திலக நர்த்தனாலயத்தின் அதிபர் ஸ்ரீமதி.யசோதரா விவேகானந்தன் அவர்களின் மாணவி ஆவார். இவர் நடனக்கலையில் பரதகலா வித்தகர், B.F.A (2nd Upper), Dip.in.Dance(1stClass) ஆகிய பட்டங்களைப் பெற்றதுடன். P.G.D. Edu, M.A.in Teacher Edu. (Internatinal) என்ற பட்டங்களையும் பெற்று தற்போது யாழ் தேசியக் கல்வியற் கல்லூரியில் நடனபாட விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார்.

ஸ்ரீமதி.சுபாதினி தயாபரன் அவர்கள் 1998 - 2001 காலப்பகுதிகளில் யாழ் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் நடனத்துறை உதவி விரிவுரையா-ளராகக் கடமையாற்றி 2001இன் பின்னர் யாழ். இந்து மகளிர் கல்லூரி, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியப் பணியையும் திறம்படச் செய்தவர்.

இவர் தரம் 6 - 9 , 10 - 13 ஆகிய வகுப்புக்களுக்குரிய பரதநாட்டிய வினாவிடைப் புத்தகங்ளையும்,"கலை அமுது" எனும் பரதநாட்டிய நூலையும் வெளியிட்டுள்ளார்.

ஸ்ரீமதி சுபாதினி தயாபரன் அவர்கள் குறிப்பிடும் இடத்து "இந்தப் புனிதமான நாட்டியக்கலையை ஒவ்வொரு மாணவர்களும் விருப்புடன் கற்பதுடன், ஒரு சிறந்த குருவிடம் தனது ஆரம்பப்பயிற்சியை ஆரம்பித்து அவரிடமே முழுமைத்துவத்தைப் பெற்று அரங்கேற வேண்டும்" எனக் குறிப்பிடுகின்றார்.

"வளர்க பரக்கலை
தொடரட்டும் சுபாதினியின் பணி"
என வெற்றிமணி கலையரங்கு வாழ்த்துகின்றது.





























கலை உலகை அலங்கரிக்கிறது உள்ளத்தை அழகுபடுத்துகிறது

Printed by: ANDRA DIGITAL IMAGE 021 222 8929

Digitized by Noolaham Foundation.